பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 05 வெள்ளிக் கிழமை 18.04.2025 கதிர் 160

### இனி இது ரகசியம் அல்ல!

அரசியல்வாதிகள் தங்கள் ஆட்சியைப் பற்றியும் வீரப் பிரதாபங்களைப் பற்றியும் அலாதியான கதைகளைப் பேசி இன்பம் காண்பவர்கள் என்பது ☞ 2

# 35 வருடங்களாக பாதுகாப்பு வலயமாக உள்ள ஆக்கிரமிப்புகளை விடுவியுங்கள்

## வலி. வடக்கு காணி விடுவிப்பு அமையம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கில் 1990ஆம்ஆண்டுமுதல்35வருடகாலமாக உயர்பாதுகாப்புவலயம்என்னும்பெயரில் அரசினால் கையகப்படுத்தப்பட்டுள்ள கீரிமலை, காங்கேசன்துறை, தையிட்டி, ஊறணி, மயிலிட்டி, பலாலி, வசாவிளான், கட்டுவன், குரும்பசிட்டி, தோலக்கட்டி ஆகிய கிராமங்களில் உள்ள பொதுமக்களின் காணிகள் தேர்தல்கள் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டதற்கமைய உடனடியாக விடுவிக்குமாறு வலி.வடக்கு காணிகள் விடுவிப்புக்கானஅமையம்ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

இது தொடர்பில் குறித்த அமையத்தினால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போர் முடிந்து 15 ஆண்டுகளின் பின்னர் ஐந்தாவது ஜனாதிபதி மாற்றமாகியும்நாலாவது நாடாளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டும் பல வாக்குறுதிகள் வழங்கி இதுவரை சுமார் 2,900 ஏக்கர் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை.

கடந்த 10ஆம் திகதி பலாலி வீதியின் ஒரு பகுதி நிபந்தனைகளுடன் திறந்து வைக்கப்பட்டதைவரவேற்கும்அதேநேரம் 2018ஆம் ஆண்டு நல்லாட்சி அரசின் காலத்தில் தேசிய பாதுகாப்பு குழுவின் அனுமதி பெறப்பட்ட காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி போன்ற கிராமங்களில் விடுவிக்கப்படவிருந்த சுமார் 500 ஏக்கள் காணிகளில் 50 ஏக்கர் மட்டுமே இதுவரை மக்களின் தேவைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக இந்த காணிகளை மக்கள் முழுமையாக அனுபவிக்க முடியாத நிலையில் இராணுவக் கெடுபிடிகள் தொடர்ந்தும் நீடிக்கின்றன.

தேசிய மக்கள் சக்தி தனது ☞ 8

## உயிர்த்த ஞாயிறு நினைவாக ஏப்ரல் 21இல் பாதயாத்திரை

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் ஆன்ம இளைப்பாற்றுக்கான 6 ஆவது ஆண்டு விசேட ஆராதனைகள், பாதயாத்திரை உள்ளிட்ட நினைவுகூரல் நிகழ்வுகள் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம், நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தில் ஏப்ரல் 21 நடைபெறவுள்ளன.

மெல்கம்கர்தினால்ரஞ்சித்ஆண்டகையின்தலைமையில் கொழும்புகொச்சிக்கடைஅந்தோனியார்திருத்தலத்தில் ☞ 2

## ரூபா 3 கோடி பணம், நகைகளுடன் கான்ஸ்டபிள் உள்ளிட்ட ஐவர் கைது

கோடிக்கணக்கான பணம், நகை என்பவற்றை காரின் பின்பகுதியில் வைத்து எடுத்துச் சென்ற பொலிஸ் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த கான்ஸ்டபிள் உட்பட 5 பேர் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தேவுந்தர ஹம்மான சாலையில் அதிகாலை 3 மணியளவில் சந்தேகத் திற்கிடமான முறையில் மிகவேகமாகச் சென்ற காரை வழிமறித்து விசேட அதிரடிப் படையினர் சோதனையிட்டபோது அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூ. ☞ 8

## பால், தயிர் மீதான வற் வரி நீக்கம்

மதிப்பு கூட்டப்பட்ட வரி திருத்தச் சட்டத்தின்படி (வற் வரி), உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் திரவப் பால் மற்றும் தயிர் ஆகியவை வலி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறை வரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 11 முதல் நடைமுறைக்கு வரும் ☞ 2

# அரசியல் தீர்வு குறித்து வாயே திறக்காத அநுர

## 13, மாகாண சபைத் தேர்தல், புதிய அரசமைப்பு தொடர்பில் நேற்று யாழ். வந்தபோது கள்ள மௌனம்




உள்ளாட்சித் தேர்தல் பரப்புரைக்காக நேற்று யாழ்ப்பாணம் வந்த இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, மாகாண சபைத் தேர்தல், புதிய அரசமைப்பு உருவாக்கம் என்பன குறித்து வாய் திறக்கவில்லை.

நல்லூர், முத்திரைச் சந்தியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியான கேணல் கிட்டுவின் ஞாபகார்த்தமாக, யாழ். மாநகர சபை காலத்தில் அழிக்கப்பட்ட கிட்டுப் ☞ 2

## உயிர்த்த ஞாயிறு தினத்தில் சிறப்புப் பாதுகாப்புத் திட்டம்

பெரியவெள்ளி, உயிர்த்த ஞாயிறு ஆகிய தினங்களைக் கருத்தில் கொண்டு சிறப்பு பாதுகாப்புத்திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

குறித்த அறிவிப்பில், நாடாளவிய ரீதியில் உள்ள தேவாலயங்களில் பெரிய வெள்ளி மற்றும் உயிர்த்த ஞாயிறு ஆகியவற்றை முன்னிட்டு இன்றும் எதிர்வரும் 20 மற்றும் 21ஆம் திகதிகளில் விசேட ஆராதனைகளும், நினைவேந்தல்நிகழ்வுகளும்நடைபெறவுள்ளன.

இந்நிலையில், விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் பங்கேற்கவுள்ளனர். அதனடிப்படையில்பாதுகாப்பைஉறுதிப்படுத்தும் செயற்பாடுகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் ☞ 9

## சட்டவிரோத தையிட்டி விகாரைப் பிரச்சினையை அரசியல்வாதிகள் ஒதுங்கினால் பேசி தீர்க்கலாம்

### யாழ்ப்பாணத்தில் இப்படிச் சமாளித்தார் ஜனாதிபதி அநுர

யாழ்ப்பாணம்தையிட்டியில்சட்டவிரோதமாகத் தனியார் காணிகளை ஆக்கிரமித்து அரச படையினரால் அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரைப் பிரச்சினையில் இருந்து வடக்கு மற்றும் தெற்கு அரசியல்வாதிகள் ஒதுங்கினால், அந்தப் பிரச்சினையைத் தம்மால் பேசித் தீர்க்கமுடியும் என்று ஜனாதிபதி அநுரகுமார நேற்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு இன்றைய தினம் வியாழக்கிழமைவருகைதந்தஜனாதிபதி,நல்லூர் முத்திரைச் சந்தியில் உள்ள கிட்டுப் பூங்காவில் மக்கள் சந்திப்பு என்ற பெயரில் உள்ளாட்சித் தேர்தல் பரப்புரையில் கலந்துகொண்டார்.

அங்குஉரையாற்றியஅவர்தெரிவித்ததாவது:

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்கள் மக்களை பிரித்துள்ளன. ஆனால் கடந்த பொது தேர்தலின் போது வடக்கு, கிழக்கு, தெற்கு, தமிழ், முஸ்லீம், சிங்கள மக்கள் என அனைவரும் ஒன்றுபட்டு வாக்களித்தனர்.

அப்படிப்பட்ட ஒன்றிணைந்த தேர்தல்களே வேண்டும். மீளபிரிய மக்கள்பிரிந்துவாக்களிக்க வேண்டாம். தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் என அனைவரும் ஒரு நாட்டு மக்களாக ஒன்றாக வாழவேண்டும்.

சகல மக்களுக்கும் சமனான உரிமைவேண்டும். அவ்வாறான நாடுதான் எமக்குத் தேவை. கடந்த ☞ 2

### தேசிய மக்கள் சக்தியை தவிர்த்து

## வேறு கட்சிகளிடம் சபைகளை வழங்கினீர்களானால் நிதி ஒதுக்க ஒன்றுக்கு 10 தடவைகள் யோசிப்போம்

### யாழ்ப்பாண மக்களுக்கு ஜனாதிபதி மிரட்டல்

உள்ளூராட்சி சபைகளை தேசிய மக்கள் சக்திக்கு வழங்காமல் மக்கள் வேறு கட்சிகளுக்கு வழங்கினால் அவற்றின் முன்மொழிவுகளுக்கு நிதி ஒதுக்கப் ஒன்றுக்குப் 10 தடவைகள் யோசிப்போம் என்று யாழ்ப்பாணத்தில் நேற்று மிரட்டல் விடுத்தார் ஜனாதிபதி அநுரகுமார.

நல்லூர் கிட்டுப் பூங்காவில் மக்கள் சந்திப்பு என்ற பெயரில் யாழ். மாநகர சபையின் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் கபிலனையும் தேர்தல் விதிக்குப் புறம்பாக மேடையில் ☞ 9

## திசைகாட்டிக்கு வாக்களிக்காத சபைகளுக்கு நிதி தரமாட்டோம் என்பது அநுரவின் பொய்

### சஜித் பிரேமதாச இடித்துரைப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திசைகாட்டிக்கு அதிகாரம் கிடைக்காத சபைகளுக்கு நிதி ஒதுக்க மாட்டோம் என கூறி மக்களை ஏமாற்றி வருகின்றார். பொய், ஏமாற்று அடிப்படையிலான அரசியலுக்கு அதிக ஆயுட்காலம் இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பொலன்னறுவை தேர்தல் தொகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் ☞ 8

காலைக்கதிர்
Kalaikkathir

# நேற்றிரவும் துப்பாக்கிச்சூடு

பலப்பிட்டிய, மருதானை பிரதான வீதியில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று அஹூங்கல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தநபர் அஹூங்கல்ல,வெலிகந்தபகுதியைச்சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். காயமடைந்தவர்கள் பலபிட்டிய ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த நபர் எப்படிச் சுடப்பட்டார் என்பது உடனடியாகத் தெரியவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த பல மாதங்களாகத் தொடர்ந்து இலங்கையின் பல பகுதிகளிலும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

இந்த வருடம் மார்ச் இறுதிப் பகுதி வரையில் இடம்பெற்ற 27 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 21பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

## இனி இது .....

தெரிந்ததுதான். "அதற்காக இப்படியா?" கேட்கும் வகையில் ஒரு கதையைச் சொல்லி இருக்கிறார் தற்போதைய விவசாய பிரதி அமைச்சர். அதுதான் வேடிக்கை.

நாட்டில் அரசியின் விலை உச்சத்திற்கு எகிறிவிட்டது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் விற்ற விலையை நெருங்கிவிட்டது. உள்நாட்டு உற்பத்தியான சிவப்பரிசியே ஆகக் குறைந்தது 250 ரூபாய் விலைக்கே கிடைக்கிறது. தாங்கள் ஆட்சிக்கு வந்தால் நெற் களஞ்சிகளைத் திறந்து அரிசி விலையைக் குறைப்போம் என்றெல்லாம் கதைவிட்ட ஆளும்தரப்பு இப்போதெல்லாம் அரிசி விலை பற்றி வாய் திறப்பதில்லை.

இந்த ஆட்சியில் கோதுமை மா விலை மட்டும்தான் குறைவு. எல்லோரும் அரிசி உணவை விட்டுவிட்டு கோதுமை உணவுகளைத்தான் உண்ணவேண்டும் என்றும்ஆளும்தரப்புவிரும்புகின்றதுபோலும். கஞ்சி குடிப்பதற்கு அரிசி வாங்குவதைவிட கோதுமை மாவில் ரொட்டி சுட்டுச் சாப்பிடலாம் என்பதுதான் உண்மை நிலை. அரிசி விலை அதிகரித்தாலும் விவசாயிகளிடம் இருந்து நெல்லை 100 ரூபாய் அல்லது அதிகபட்சம் 115 ரூபாய்க்கே கொள்முதல் செய்கிறார்கள் வியாபாரிகள். உரமானியம்வழங்கப்பட்டாலும் ஏனைய உள்ளீடுகள் மற்றும் உற்பத்திச் செலவுகள் அதிகரித்திருக்கும் நிலையிலும் தமக்கு நெல்லுக்கு குறைந்தபட்சம் 135 ரூபாயாவது வேண்டும் என்று விவசாயிகள் கேட்கிறார்கள். மழை வெள்ளம் வந்து பயிர்களை அழித்துச் சென்ற நிலையிலும் அறுவடையின்போது மழை வந்து விளைச்சலை நாசம் செய்துவிட்ட நிலையிலும் விவசாயிகள் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்துவருகையில் பிரதி அமைச்சரின் கருத்தைக் கேட்டு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

தன்னுடைய கிராமத்தில் இரண்டு விவசாயிகள் தங்கள் நெல்லை விற்று ஒரு வேன் மற்றும் ஒரு டிராக்டரை வாங்கியிருக்கின்றனர் என்று பிரதி அமைச்சர் கூறியிருக்கின்றார். அந்த விசாயிகளை அவர் ஒரு தடவை மக்கள் முன்பாக அழைத்து வந்து காட்டவேண்டும். ஏனெனில் அவர்களது வயல்களில் நெல்லுக்குப் பதிலாக பொன் விளைகிறாதா என்பதை அறியவேண்டும். நான் அறிந்த வரையில் வடக்கில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் வழக்கத்தைவிட இந்தத் தடவை விளைச்சல் குறைவு, வயல்களில் புறகளின் தாக்கம் அதிகம் என்றுதான் புலம்புகிறார்கள்.

ஆனால், பிரதி அமைச்சரோ முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டு மக்கள் புத்தாண்டை அதிக வெற்றியுடன் கொண்டாடியதாகவும் அவர் கூறினார். அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, விளைச்சல்களுக்கு நல்ல விலைகளைப் பெறுதல், மானியங்களை அதிகரித்தல் மற்றும் பொருட்களின் விலைகள் குறைதல் ஆகியவைவே இதற்குக் காரணங்கள் என்று கதைவிடுகிறார். உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள். இந்த அமைச்சர சொல்வதில் ஏதாவது உண்மை இருக்கிறதா? பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டாமா?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அரசியல்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூங்காவில் இடம்பெற்ற உள்ளாட்சித் தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

மீன்பிடித்துறை அமைச்சர், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் உள்ளாட்சி சபைகளுக்கான வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் என்று பல நூற்றுக்கணக்கானவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளராகக் கலந்துகொண்ட ஜனாதிபதியின் உரை யாழ். பல்கலைக்கழக மொழியியல் துறை விரிவுரையாளரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. அந்த உரையின் எந்தவொரு இடத்திலும் ஜனாதிபதி தமிழ் மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்தோ, மாகாண சபைத் தேர்தல் எப்போது நடக்கும் என்பது குறித்தோ, புதிய அரசமைப்புக்கானமுயற்சிகளைதேசியமக்கள் சக்தி ஆளும்தரப்பு எப்போது தொடங்கும் என்பது குறித்தே எந்தவொரு கருத்தையும் தெரிவிக்காதுமௌனம்காத்தார். அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து அவர் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை எப்போது நிறைவேற்றுவார் என்பது குறித்தும் அவர் வாயே திறக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த அநுரகுமார, தான் ஜனாதிபதியானால் இலங்கையின் அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவார் என்று மக்களுக்குப் பகிரங்க வாக்குறுதி வழங்கினார். ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஆதரவு வழங்குமாறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசியபோதும் அவர் இந்த உறுதிமொழியை வழங்கியிருந்தார். எனினும் அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்று 6 மாதங்கள் கடந்தபோதும் 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அது பற்றி அவர் இப்போது வாயும் திறப்பதில்லை. நேற்று தேர்தல் பரப்புரைக்காக மீண்டும் யாழ்ப்பாணம் வந்தபோதும் அவர் அது பற்றி வாய் திறக்கவில்லை.

காணாமலாக்கப்பட்டவர்கள் மற்றும் படையினரிடம் கையளிக்கப்பட்டபின்னர் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்கிற உண்மையை மக்களுத் தெரியப்படுத்துவோம் என்றும், படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள காணிகளை விடுவிப்போம் என்றும், தனியார் காணிகளையும் ஆக்கிரமித்துக் கட்டப்பட்ட காங்கேசன்துறை ஜனாதிபதி மாளிகையை மக்களின் பயன்பாட்டுக்கு வழங்குவோம் என்றும், இலங்கைப் படைகளில் 2 ஆயிரம் தமிழ் இளைஞர்களை இணைத்துக்கொள்வோம் என்றும் தெரிவித்த ஜனாதிபதி தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து மறந்தும் வாய் திறக்கவில்லை.

இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்தப்படும் என்று முன்னர் ஆளும் தரப்பினரால் உறுதியளிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள் எப்போது நடத்தப்படும் என்பது குறித்தும் அவர் எந்தக் கருத்தையும் வெளிப்படுத்தவில்லை. புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்றுதான் வழங்கிய தேர்தல் வாக்குறுதிக்கு அமைய அந்தப் பணிகள் எப்போது தொடங்கப்படும் என்றும் அவர் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

## பால் மற்றும்.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் திரவப் பால் மற்றும் தயிர் மீதான வற் வரி நீக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## உயிர்த்த ஞாயிறு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட ஆராதனை மற்றும் இறந்த ஆன்மாக்களை நினைவுகூரும் நிகழ்வுகள் அன்றைய தினம் காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரை நடைபெறவுள்ளது.

சர்வமத பிரார்த்தனை வழிபாடுகளும் நடைபெறவுள்ளன. காலை 8.45 மணிக்கு ஆலயமணி ஓசை எழுப்பப்பட்டு, 2 நிமிட மௌனஅஞ்சலிசெலுத்தப்படும். இந்நிகழ்வுக்கு முன்பதாககொழும்புமறைமாவட்டத்தின்புனித லூசியாள் பேராலயத்திலிருந்து கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம் வரையான பாத யாத்திரை அன்றைய தினம் காலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்நிகழ்வில் ஐ.நா.வின் இலங்கை பிரதிநிதிகள், சர்வ மதத் தலைவர்கள், அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள், உயிரிழந்தோரின் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் வெளிநாட்டு உயர்ஸ்தானிகர்கள் என பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நீர்கொழும்பு கட்டுவப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தில் அன்றைய தினம் காலை 8.15 மணிக்கு கொழும்பு மறை மாவட்ட துணை ஆயர்களான வணக்கத்திற்குரிய மெக்ஸ்வல் சில்வா மற்றும் வணக்கத்திற்குரிய ஜே.டீ. என்தனி ஆண்டகையோர் தலைமையில் விசேட ஆராதனைகள் மற்றும் ஆன்ம இளைப்பாற்றி நிகழ்வுகள் ஒப்புகொடுக்கப்படவுள்ளன.

இதையடுத்து, அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு கொழும்பு மறை மாவட்ட பேராயர்மெல்கம்கர்தினால்ரஞ்சித்ஆண்டகை மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் ஆகியோரின் தலைமையில் பாதிக்கப்பட்ட 10 குடும்பங்களுக்கு வீடுகள் கையளிக்கப்படுகின்ற நிகழ்வு நடைபெறவுள்ளது.

அத்துடன் இந்தக் குண்டுத் தாக்குதல்களினால் மரித்துபோன ஆன்மாக்களை வேதசாட்சிகளாக ஆலயங்களில் பிரகடனப்படுத்தும் நிகழ்வும் திருப்பலிஆராதனையும்அன்யைதினம்மாலை 5.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

## சட்டவிரோத....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலங்களில்போர்புரிந்தோம்அதனால்என்ன நடந்தது ? அழிவுகளைத்தான் சந்தித்தோம். எம் உறவுகளை இழந்தோம். வடக்கிலும் தெற்கிலும் அதே நடந்தது. மீள அப்படி ஒரு நிலை எமக்கு வேண்டாம்.

எங்கள் தலைமுறைகள் போர் புரிந்தோம். அடுத்த தலைமுறைகள் போர் இல்லாது சமாதானமாக அனைவரும் ஒன்றாக வாழவேண்டும். போர் இனவாத அரசியல்வாதிகளுக்கே தேவை எமக்குத் தேவையில்லை.

யாழ்ப்பாணம் திஸ்ஸ விகாரை பிரச்சினை இருக்கின்றது. அதனை இலகுவாக தீர்க்க முடியும். அதற்கு அந்த விகாரையை வைத்து வடக்கில் அரசியல் செய்பவர்கள் அதில் இருந்து விலகவேண்டும். அதேபோன்று தெற்கிலும் அந்த விகாரையை வைத்து அரசியல் செய்பவர்கள். அந்த அரசியலைக் கைவிடவேண்டும். அவ்வாறு அரசியல்வாதிகள் விகாரை பிரச்சினையில் இருந்து விலகுவார்களாக இருந்தால் எம்மால் அந்த பிரச்சினையை மிக இலகுவாக தீர்க்க முடியும்.

விகாரை காணி உரிமையாளர்கள் , விகாரைக்குரிய விகாராதிபதி , நாக விகாரை விகாராதிபதி ஆகியோர் இணைந்து பேசி அதற்கு ஒரு தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும்.

நாட்டில் தொல்பொருள் எச்சங்கள் காணப்பட்டால் , அது தமிழா , சிங்களமா முஸ்லிமா, இந்துவா பௌத்தமா என பார்க்காது எமது நாட்டின் தொல்லியல் மரபு எமது பண்பாடு என ஒரு நாட்டு மக்களாக சிந்திக்க வேண்டும். ஆனால் இனவாதிகள் அப்படிப் பார்ப்பதில்லை. அதன் ஊடாக இனவாதத்தைத் தூண்ட முயல்கின்றனர். அப்படியான இனவாதக் குழுக்களை மக்கள் இனம் கண்டு, அவர்களை தோற்கடித்துள்ளார்கள்.

இனி அவர்கள் எந்த வேடம் அணிந்து வந்தாலும் அவர்கள் இனவாதிகள் என்பதனை மக்கள் இனம்கண்டு அவர்களை தோற்கடிப்பார்கள். அதேவேளை தேசிய மக்கள் சக்தியும் இனியும் இனவாதம் நாட்டில் தோன்ற இடமளிக்கமாட்டாது.

யாழ்ப்பாணத்தில் இருந்து புதிய அணி நாடாளுமன்றம் வந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் பல பாரம்பரிய கட்சிகள் உள்ளன. கடந்த பொது தேர்தலில் அவற்றினை தவிர்த்து எமது கட்சியைச் சார்ந்த மூவரைத் தெரிவு செய்துள்ளீர்கள். புதிய ஓர் அணி யாழில் இருந்து நாடாளுமன்றம் வந்துள்ளது.

யாழ்ப்பாண மக்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கையை நாம் வீணடிக்மாட்டோம். இனவாதிகளுக்கு அஞ்சி மக்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்யாது இருக்கமாட்டோம். நாம் தேசிய ஒருமைப்பாட்டுக்காக என்றும் உழைப்போம்.

பாதுகாப்புக் காரணங்களுக்கு என தமிழ் மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அந்தக் காணிகளைப் பாதுகாப்புத் தரப்பிடம் இருந்து மீளப் பெற்று காணி உரிமையாளர்களிடம் கையளிப்போம்.

இன்னொரு போர் நாட்டில் தோன்றும் என்ற அச்சத்தில் கையகப்படுத்தப்பட்ட காணிகளை கடந்தஆளும்தரப்புமீளக்கையளிக்கவில்லை. ஆனால் நாங்கள் இன்னொரு போர் நாட்டில் தோன்ற அனுமதிக்க மாட்டோம். அதனால் பாதுகாப்பு காரணங்களுக்கு என காணிகள் தேவையில்லை. விரைவில் காணிகளை உரிமையாளர்களிடம் கையளிப்போம்.

மூடப்பட்ட வீதிகளையும் படிப்படியாகத் திறந்துமக்கள்பாவனைக்குகையளிக்கிறோம். வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் மூடப்பட்டு இருந்தவீதிகளைதிறந்துள்ளோம். கொழும்பில் பாதுகாப்பு காரணம் என மூடப்பட்ட வீதிகளை திறக்கும்போது ஏன் யாழ்ப்பாணத்தில் வீதிகளை திறக்க கூடாது? நாட்டில் பாதுகாப்பு காரணமாக என மூட்டப்பட்ட வீதிகளைத் திறப்போம்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான தகவல்களையும் வெளிப்படுத்துவோம். அரசிடம், பொலிசாரிடம், இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை வெளிப்படுத்துவோம். ஒருவர் இறந்தால் அவருக்காக அழுது, அவருக்குச் செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்து சில காலத்தில் ஆறுதல் அடைவோம். ஆனால காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா? என்பது தெரியாமல் படும் வேதனைகளை நான் நன்கு அறிவேன். எனது சகோதரர்கூட காணாமல் ஆக்கப்பட்டவரே. அதனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் வலி எனக்கு புரியும். எமக்கு அமைதி தேவை. அதற்காக அவர்களுக்கு என்ன நடந்தது என்பதனைகண்டறிந்துவெளிப்படுத்துவோம்.

நாங்கள் நாட்டைப் பொறுப்பெடுத்த காலம் முதல் நாட்டை வளப்படுத்தி வருகின்றோம். எதிர்வரும் 5 வருடத்தில் அந்நிய செலவாணியை அதிகரிப்போம். கைவிடப்பட்ட பலசெயற்திட்டங்களைதற்போது மீள ஆரம்பித்துள்ளோம். அதேபோன்று பல வேலை வாய்ப்புகளை வழங்கவுள்ளோம். குறிப்பாக தமிழ் இளையோர் 2 ஆயிரம் பேருக்கு பொலிஸ் திணைக்களத்தில் வேலை வாய்ப்புக்களை வழங்கவுள்ளோம்.

அதேபோன்று இராணுவம், கடற்படை விமான படையிலும் தமிழ் இளையோருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்கு இங்குள்ள பெரியவர்கள்பெற்றோர்கள் இளையோர்களை இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த எடுத்துக்கூறவேண்டும்.

காங்கேசன்துறையில் ஒரு ஜனாதிபதி மாளிகை உள்ளது. அது எமக்குத் தேவையில்லை. அதனை யாழ்ப்பாண மக்களுக்குபயன்படக்கூடியவாறுமக்களுக்காக வழங்கவுள்ளோம். யாழ்ப்பாணப் பொது நூலகத்தை எரித்தார்கள். அது எமது இதயங்களை காயப்படுத்தி உள்ளது. நூலகம் எரிக்கப்பட்டது இனவாதத்தின் உச்சமாகவே நாங்கள் பார்க்கின்றோம். அதற்காகவே நூலகத்தை புனரமைக்க நிதி ஒதுக்கியுள்ளோம்

நாட்டிற்குசுற்றுலாப்பயணிகள்பெருமளவில் வருகின்றார்கள். அவர்கள் வடக்குச் செல்வது குறைவாக உள்ளது. அதனால் நாம் உள்ளூர் விமான சேவைகளை வலுப்படுத்த உள்ளோம். அதன் ஊடாக சுற்றுலாப் பயணிகளை வடக்குக்கு செல்ல வைக்க முடியும். வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அழகிய கடற்கரைகள் உள்ளன. அவற்றினை சுற்றுலா தளங்களாக மேம்படுத்துவோம்

அதேவேளை யாழ்ப்பாணத்தின் அதன் பாரம்பரியம் கலாசாரம் பண்பாடு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தை மீள கட்டி எழுப்புவோம். வடக்குகடற்பரப்பில் உள்ளகடல் வளங்களை அழிக்க அனுமதிக்கமாட்டோம். அந்தக்கடல்வளங்களைநம்பிபெருமளவான கடற்தொழிலாளர்கள் உள்ளபோது, அந்த வளங்களை அழித்து அவர்களின் வாழ்வாதாரத்தை அனுமதிக்க முடியாது. வடக்கு கடல் வளங்களைப் பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதனை எடுங்கள் என கடற்படையினருக்கு

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

## ஜனாதிபதி பொய்யுரைப்பதால்

# அதிகாரப் பகிர்வு, உள்ளூராட்சி தத்துவதுவம் என்பன கேலிக்குள்ளாக்கப்படுகின்றது

## முன்னாள் தவிசாளர் நிரோஷ் சாட்டை

உள்ளூராட்சி மன்றங்கள் மத்தியில் ஆளும் கட்சியின் ஆளுகைக்குள் உள்ளூராஜுட்சி மன்றங்கள் இருந்தால் மட்டுமே மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியும் எனவும் தாம் நிதி ஒதுக்க முடியும் எனவும் தேர்தல் மேடைகளில் ஜனாதிபதி பேசுவதால் அவர் அதிகாரப் பகிர்வையும் ஜனநாயக ரீதியில் உள்ளூராட்சி தத்துவத்தையும் மீறுகின்றார் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் நிதி விடயத்தில் அந்தந்த சபைகளின் தலைவர்களுக்கே அதிகாரம் காணப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றங்கள் மத்தியில் தங்கி வாழும் நிறுவனங்கள் அல்ல. உள்ளூராட்சி என்பது ஆட்சி முறைமை. அது வரிகளையும் வருமானங்களையும் திரட்டுவதற்கும் தீர்மானிப்பதற்கும் செலவிடுவதற்கும் அதிகாரம் பொருந்திய சட்ட ரீதியான ஆட்சி அலகாகும்.

உள்ளூராட்சி மன்றங்கள் உலகளவில் வரலாற்று ரீதியில் உருவாக்கப்பட்ட ஆட்சி முறை என்ற அடிப்படையில் மத்திய அரசாங்கத்திடம் இருந்து அதிகாரப்பகிர்வைப் பெற்றுள்ளன. ஜனநாயக மற்றும் சட்ட ரீதியிலான அந்தஸ்தாக உள்ளூராட்சி மன்றங்கள் அதிகாரங்களைப் பெற்றுள்ளன. இலங்கையிலும் அரசமைப்புச் சட்ட சரத்துக்களின் ரீதியில் உருவாக்கப்பட்ட சட்டங்களால் அதிகாரத்தினைப் பெற்றுள்ளன. சட்ட ரீதியில் உள்ளூராட்சி மன்றங்கள் சோலைவரி, மாற்றம் ஆதனப் பெயர்மாற்றங்களின் போதான முத்திரைத் தீர்வை, நீதிமன்ற குற்றப்பணம், சேவைகளுக்கான அறவீடுகள், தண்டப்பணங்கள் என பல மில்லியன்களுக்கு உரித்தாளர்களாகவுள்ளன. வசதிக்குறைவான உள்ளூராட்சி மன்றங்களும் காணப்படுகின்றபோதும் அவ்வாறாக வசதிக்குறைவுக்கு மத்திய அரசின் எடுபிடியாக அல்லது ஆதிக்கத்தினுள் உள்ளூராட்சி மன்றங்கள் இருப்பது தீர்வல்ல.




மத்திய அரசாங்கம் சர்வதேசத்திடம் பெறும் அதிக உதிவிகள் மக்களின் நலன்புரி விடயங்களை மையமாகக் கொண்டுள்ளன. அந் நிதி உதவிக்கான முன்மொழிவுகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட சேவைப்பரப்புக்களாகக் காணப்படுகின்றன. மத்திய அரசாங்கம் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட பல்வேறுபட்ட சர்வதேசதாபனங்களிலும் நாடுகளிலும் இருந்து மானியங்களைப் பெறுகின்றது. அவ் உதவிக் கோரிக்கையில் உள்ளூராட்சி மன்றங்கள் செய்ய வேண்டிய சேவைப்பரப்புக்களை காரணங்காட்டியே உதவிகள் பெறுகின்றன. அவ்வாறு அரசாங்கம் பெறும் உதவிகளை ஜனாதிபதி தனது கட்சிக்காரரின் சபைக்கு மட்டும்தான் கொடுப்பேன் எனக்கூற முடியாது. அவ்வாறு ஜனாதிபதி செய்தால் உதவிகளை சர்வதேசம் வழங்காது. அப்படி அரசாங்கம் செயற்பட்டால் இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச கொடையாளர்களின் கவனத்திற்கு நாம் கொண்டு செல்ல முடியும். அதனால் நாட்டிற்கான சர்வதேச உதவிகளே தடைப்பட்டுவிடும்;. சர்வதேச உதவி தடைப்பட்டால் அது மத்திய அரசாங்கத்தின் இருப்புக்கே ஆபத்தாக மாறிவிடும். வெளிநாட்டு உதவிகளை ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட சபைகளுக்கு தேவை முன்னுரிமை அடிப்படையில் அரசாங்கம் பகிர்ந்தே ஆகவேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களின் ஆளணியினருக்கான சம்பள விடயங்கள் மத்திய அரசு சார்ந்திருந்த போதும் அவற்றிற்கான மானிய உதவியை இன்றைய ஜனாதிபதி நினைத்தால் மாத்திரம் நிறுத்திவிட முடியாது. உத்தியோகத்தர்களின் நியமனம் மற்றும் சேவை அடிப்படையில் நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு சட்டப் பாதுகாப்பும் தொழில் உரிமையும் உள்ளது. ஆகவே அரசாங்கம் போதையில் பேசுகின்ற தெருச்சண்டியர்கள் போல விலாசம் எழுப்பக்கூடாது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

## வீதி அபிவிருத்தி அமைச்சின் பதில் செயலாளராக பைஷல் கடமையேற்பு

(அபு அலா, த.ஜெபி ஜனார்த்)

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்து, கட்டிடங்கள் மற்றும் நிர்மாணம், வீடமைப்பு, கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கள் அமைச்சின் பதில் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள இஷட்.ஏ.எம்.பைஷல் தனது கடமைகளை செவ்வாய்க்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வந்த எம்.எம்.நஸீர் கடந்த 11 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்தே, கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக கடமையாற்றி வருகின்ற இஷட்.ஏ.எம்.பைஷல் அப்பதவிக்கு மேலதிகமாக வீதி அபிவிருத்தி அமைச்சின் பதில் செயலாளராக கடமையாற்றும் பொருட்டு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகரவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள், மாகாண திணைக்களத் தலைவர்கள், அமைச்சின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



## வேலணை மக்களிடம் வசமாகமாட்டிய கால்நடைகளை திருடிவந்த இருவர்

நீண்ட காலமாக தீவக பகுதியில் திட்டமிட்டு கால்நடைதிருட்டில் ஈடுபட்டுவந்த திருடர் குழுவொன்று வேலணையில் மக்களது முயற்சியால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் வேலணை 6 ஆம் வட்டாரம் சங்கத்தார்கேணி பகுதியில் புதன்கிழமை 8.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருகையில் –

வேலணை பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் திருட்டுத்தனமாக பிடிக்கப்பட்ட ஆடுகள் ஒரு தொகுதி, வேலணை 6 ஆம் வட்டாரம் சங்கத்தார்கேணி பகுதியிலுள்ள குறித்த திருட்டுக் கும்பலின் சந்தேக நபராக கருதப்படும் ஒருவரது வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் குறித்த ஆடுகளை வெகியூரைச் சேர்ந்த சிலரின் ஒத்துழைப்புடன் புதன்கிழமை இரவு மகேந்திரா வாகனம் மூலமக யாழ்ப்பாணத்துக்கு சட்டவிரோதமாக கடத்திச் செல்லும் முயற்சியில் குறித்த குழு இறங்கியுள்ளது.

இதன்படி குறித்த திருட்டுக் குழு புதன் இரவு 8 மணியளவில் 6 ஆடுகளை குறித்த வாகனத்தில் ஏற்றும் சந்தர்ப்பத்தில் அதை சிலர் கண்டு சந்தேகித்து சம்பவம் தொடர்பில் ஊரிலுள்ள முக்கியஸ்தர்கள் மற்றும் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததுடன் அந்த திருட்டு முயற்சியில் ஈடுபட்டவர்களை பிடிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர்.

இந்தநிலையில் சம்பவம் தொடர்பில் கேள்வியுற்ற ஆடுகளை பறிகொடுத்த உரிமையாளர்கள் குறித்த இடத்துக்கு வந்திருந்த நிலையில் அங்கிருந்த மக்களது ஒத்துழைப்புடன் களவாக பிடிக்கப்பட்டு கடத்திச் செல்ல வாகனத்தில் ஏற்றப்பட்ட 6 ஆடுகள், மகேந்திரா வாகனம், மற்றும் இரண்டு சந்தேக நபர்களையும் பிடித்துள்ளனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்த ஒருவர் தப்பி ஓடியுள்ள நிலையில் பிடிபட்ட இருவரையும் பொதுமக்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனனர்.

தீவக பகுதியில் கட்டாக்காலி கால்நடைகள், வளர்ப்பு கால்நடைகள் என நாளாந்தம் பல கால்நடைகள் களவாடப்படுவதும் இறைச்சிக்காக கொல்லப்படுவதுமான சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் நிலையில் அது தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் துறைசார் தரபினருக்கு முறியிட்டும் கூட அத்திருட்டு சம்பவங்களை கட்டுப்படுத்த முடியாது திருட்டு சம்பவங்கள் பெரும் கொதி நிலையில் இருந்துவருகின்றது.

இந்நிலையில் புதன்கிழமை வேலணை பொதுமக்களாகிய தாம் ஒன்றிணைந்து குறித்த திட்டமிட்டு திருடும் திருட்டு குழுவை சேர்ந்த இருவரை கையும் களவுமாக பிடித்துள்ளாமையானது மக்கள் மத்தியில் குறித்த திருட்டு சம்பவங்களுக்கு தீர்வை எட்டமுடியும் என்ற நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளாதாக தெரிவித்தனர்.

இதனிடையே குறித்த இரு சந்தேக நபர்களுடன் 6 ஆடுகள் மற்றும் மகேந்திரா வாகனமும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் எனவும், சந்தேக நபர்களுடன் சான்றுப் பொருள்களும் நீதிமன்னில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## விழிப்புணர்வோடு நடப்போம்

கடந்த மூன்று வாரங்களுக்குள், தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியப் பகுதியில் பல நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன, இது 'அடுத்த பெரிய நிலநடுக்கம்' ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட கணிப்புக்கள் குறித்த அச்சத்தை எழுப்புகிறது, தெற்காசியக் கரையோரங்கள் மீண்டும் ஒரு ஆழிப் பேரலைத் தாக்கத்தை எதிர்கொள்ளும் சூழல் உருவாகலாம் என்ற எச்சரிக்கையையும் சில பேராசிரியர்கள் விடுத்துள்ளனர்.

ஏப்ரல் 16 பிலிப்பைன்ஸில் 5.6 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும், சேதம் அல்லது உயிரிழப்புகள் குறித்த உடனடி அறிக்கைகள் எதுவும் இல்லை என்றும் அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் (USGS) தெரிவித்துள்ளது. மிண்டானாவோ தீவின் கடற்கரையில் ஏற்பட்ட நிலநடுக்கம் 30 கி.மீ ஆழத்தில் இருந்தது என்று அந்த அறிக்கை மேலும் கூறியது. புதன்கிழமை மாலையில் ஆப்கானிஸ்தானின் இந்து குஷ் பகுதியில் 5.9 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது, இது டெல்லி உட்பட வட இந்தியாவின் சில பகுதிகளை உலுக்கியதாகக் கூறப்படுகிறது என்று இந்திய தேசிய நிலநடுக்கவியல் மையம் (NCS) தெரிவித்துள்ளது. 75 கி.மீ ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், பரவலான பொதுமக்களை எச்சரிக்கை செய்தது, ஆனால் உடனடி உயிரிழப்புகள் அல்லது கட்டமைப்பு சேதத்தை ஏற்படுத்தவில்லை என்று அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

கடந்த மாதம் (மார்ச் 28), மியான்மரை 7.7 ரிக்டர் அளவிலான பேரழிவு நிலநடுக்கம் தாக்கியது, மேலும் வங்கதேசம், இந்தியா, லாவோஸ், தாய்லாந்து மற்றும் சீனா உள்ளிட்ட புறநகர்ப் பகுதிகளில் உள்ள பல நாடுகளையும் பாதித்தது. மியான்மரில் ஏற்பட்ட பேரழிவு இப்போது நன்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஒரு பெரிய நிலநடுக்கம் இலங்கையில், குறிப்பாக அதன் அடர்த்தியான மக்கள்தொகை மற்றும் அதிக நகரமயமாக்கப்பட்ட மேற்கு கடற்கரையில் பேரழிவு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பது தெளிவாகிறது.

பாரம்பரியமாக பூகம்பத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதி என்று அறியப்படாவிட்டாலும், சமீப காலங்களில் இலங்கை எதிர்பாராத விதமாக நிலஅதிர்வுகளைச் சந்தித்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, தொடர்ச்சியான சிறிய நிலஅதிர்வுகள் பதிவாகியுள்ளன. ஆசிய பசிபிக் பேரிடர் மேலாண்மை கூட்டணியின் கூற்றுப்படி, இலங்கையில் 2020ஆம் ஆண்டில் மொத்தம் 16 சம்பவங்களும், 2021இல் 18 நிகழ்வுகளும் பதிவாகியுள்ளன. இருப்பினும், 2022ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சிறிய நிலநடுக்கங்களின் எண்ணிக்கை ஐந்தாகக் குறைந்துள்ளது. 2023ஆம் ஆண்டில், ஒன்பது சிறிய நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன. இதற்கிடையில், பதிவு செய்யப்பட்ட பெரும்பாலான நிலநடுக்கங்கள் ரிக்டர் அளவுகோலில் 3 க்கும் குறைவாகப் பதிவாகியுள்ளதால், நிலநடுக்கங்கள் கட்டடங்களை கணிசமாக பாதிக்கும் வாய்ப்பு மிகக் குறைவு என்று இலங்கையின் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், நிலநடுக்க நிகழ்வுகளில் ஏற்பட்ட இந்த அசாதாரண எழுச்சி நிபுணர் சமூகம் மற்றும் உள்ளூர் மக்கள் இருவரிடையேயும் கவலைகளை எழுப்பியுள்ளது. 2023 ஆம் ஆண்டில், இந்தியாவில் நிலநடுக்கம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்த கவலைகள் அதிகரித்தன, இது இலங்கைக்கு உடனடி அச்சுறுத்தலை ஏற்படுத்தாது என்று நிபுணர்கள் தெரிவித்தனர். இந்தியாவில் உத்தரகண்ட் பகுதியில் நிலநடுக்கங்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இந்திய விஞ்ஞானிகள் எச்சரித்தனர். இந்திய தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் (NGRI) தலைமை விஞ்ஞானி கலாநிதி பூர்ணச்சந்திர ராவ் கடந்த வாரம் இந்திய ஊடகங்களிடம் இமயமலைப்பகுதி நிலநடுக்கங்களுக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடியதாக இருக்கிறது என்று தெரிவித்தார். உத்தரகண்ட் 'துர்கியேவைப் போன்ற அல்லது அதற்கு மேற்பட்ட அளவிலான ''எந்த நேரத்திலும் ஒரு பெரிய நிலநடுக்கத்தைக் காணக்கூடும்' என்றும், அது 8 அளவிலான நிலநடுக்கமாக இருக்கலாம் என்றும் தெரிவித்திருக்கிறார். இது பல கவலைகளை எழுப்புகிறது. நிலநடுக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் சாத்தியமாகலாம் சாத்தியமாகாமலும் போகலாம். ஆனால் அதற்குத் தயாராக இருப்பது அவசியம்.

இலங்கையில் பெரும்பாலான பேரழிவுகள் வெள்ளம், நிலச்சரிவுகள், தீவிர காற்று மற்றும் வறட்சி போன்ற காலநிலையால் ஏற்படுகின்றன. உலகளாவிய காலநிலை ஆபத்து குறியீட்டின்படி, காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கை முதலிடத்தில் உள்ளது. எனவே, பூகம்பங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுனாமி அபாயங்களின் சாத்தியமான தாக்கத்தை வரைபடமாக்க உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிபுணர்களுடன் சேர்ந்து நடவடிக்கை எடுப்பது அவசியம். அடுத்த நெருக்கடி ஏற்படும் வரை காத்திருக்காமல், செயல்படுவோம்

## பொருமியவர்கள், பம்முகிறார்களா?

என். சத்தியமூர்த்தி

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளப்பெறுவது குறித்து ஆராய ஜனாதிபதி அநுரவின் ஆளும்தரப்பு ஓர் உயர்மட்ட பரிசீலனை குழுவை அறிவித்துள்ளது. அந்தச் சட்டத்தை பின்வாங்காவிட்டால், ஐரோப்பிய ஒன்றியம், இலங்கைக்கான ஜிஎஸ்பி-பிளஸ் வரிசலுகையை நீக்கிவிடவேண்டும் என்று நாட்டின் தற்போதைய பொருளாதார பிரச்சினைகள் குறித்து சிறிதளவும் கரிசனை இல்லாமல் சில தமிழ் தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனால், களத்தில் நிகழ்வது என்ன?




பல்வேறு கிரிமினல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து முன்னாள் கிழக்கு மாகாண முதல்வர் பிள்ளையானை பொலிஸ், அதே தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்துள்ளது. தமிழ் அரசியல் தலைமைகளோ, திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல், வாய் திறக்க முடியாமல் பிள்ளையான் விடயத்தில் மட்டும் திடீர் மௌனியாகி விட்டனர்.

பிள்ளையான் நல்லவரா, கெட்டவரா என்பதல்ல கேள்வி. அவர் மீது சுமத்துப்பட்ட குற்றங்கள், சரியா-தவறா என்பதுகூடப் பொலிஸ் விசாரணைகள் முடிவுறும் போதுதான் தெரியும். அவர் குற்றமே அற்றவர் என்று யாரும் அவருக்கு ஆதரவாக கச்சைகட்டிக்கொண்டு களமிறங்க முடியாது. என்றாலும், கடந்த காலங்களில் பிள்ளையானை மாதக் கணக்காக சிறைவைத்திருந்த பொலிஸாரால் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் ஒரு சிலவற்றைக் குறித்தாவது புலன் விசாரணை செய்திருக்க முடியாதா? குறிப்பாக, உயிர்த்த ஞாயிறு தீவிரவாத தாக்குதலில் பிள்ளையானுக்கும் பங்கு இருந்தது என்று அவரது முன்னாள் உதவியாளர் அசாத் மௌலானா கூறிய குற்றச்சாட்டுகள் குறித்து முன்னரே விசாரணை செய்திருக்கலாம் அல்லவா?

### விசாரணை இலட்சணம்

பிரச்சினை அதுவல்ல. இன்றுவரை, இலங்கை பொலிஸ் வெளிநாட்டில் வாழும் மௌலானவிடம் கேள்விகளைக் கேட்டு, அவரது குற்றச்சாட்டுகளின் நம்பகத் தன்மையை ஊர்ஜிதம் செய்ததாகச் செய்தி இல்லை. அவ்வாறு எப்போதாவது செய்திருந்தால், அது குறித்தும் செய்திகள் வரவில்லை. முக்கியமாக, ஈஸ்டர் தாக்குதல் வழக்கில் பிள்ளையானை நீதிமன்றத்தின் முன்நிறுத்தினால், அப்போது ஆசாத் மௌலானா, சாட்சியம் அளிப்பாரா என்பதுகூட ஊர்ஜிதம் ஆகவில்லை.

இதுதான், இலங்கை பொலிஸ் விசாரணைகளின் இலட்சணம் என்பதே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் உணர்த்தும் உண்மை. இத்தனை தூரம் அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டவர்கள் உயிரிழந்த ஒரு தீவிரவாத தாக்குதல் குறித்த விசாரணைகளின் முடிவு இதுவென்றால், தற்போது உயிர்த்தெழுந்துள்ள விசாரணை முடிவுகளை மட்டும் எவ்வாறு நம்புவது?

உயிர்த்த ஞாயிறு விவகாரத்தில், அடுத்தடுத்த அரசுகள் நீதி வழங்கவில்லை என்ற கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தொடர்ந்து குற்றம்சாட்டி வந்திருக்கிறார். என்றாலும், தீவிரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து நடைபெற்ற 2019 ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற கோட்டபாய ராஜபக்சவிற்கு ஆதரவாக கருத்து தெரிவித்தார் என்று அப்போது கருதப்பட்டது.

பின்னர் ரணில் அரசு, தற்போது ஜனாதிபதி அநுர ஆகியோருக்கும் அவர் ஆதரவு வழங்கினார் என்றும் கருதப்பட்டது. குறிப்பாக 2019 காலகட்டத்திலேயே, தாக்குதலுக்குப் பின்னால் கோட்டா இருந்திருக்கலாம் என்ற சந்தேகம் வெகுவாக சமூக வலைதளங்களில் அடிபட்டது. குறிப்பாக, கோட்டாவும் தற்போதைய ஜனாதிபதி அநுரவும் தங்களது தேர்தல் பரப்புரைக் காலத்திலேயே கர்தினாலை சந்தித்து ஆதரவு கோரினர். அதிலும் அநுர, தனது வெற்றி அறிவிக்கப்பட்ட அன்றே, அன்னாரை, கொழும்பு ஆர்ச் பிஷப் பேலசில் சென்று, பார்த்து பேச்சு நடத்தினார்.

அந்த உறுதிமொழிகளின் தொடர்ச்சியாகவே பிள்ளையான் கைது உள்ளிட்ட பன்முக விசாரணை முடுக்கி விடப்பட்டுள்ளது என்றே கருதுவோம். என்றாலும், கர்தினால் ரஞ்சித் ஆண்டகை ஒவ்வொரு அரசிற்கும் ஈஸ்டர் தாக்குதல் குறித்து தனக்கு ஏதோ ஒரு விடயம் தெரிந்தது போல் அழுத்தம் கொடுத்தது, அவரையும் ஆட்டுவிப்பது வேறு யாரோ, எந்த நாடோ. என்ற கேள்வியை எழுப்புகிறது.

அது குறித்து கர்தினாலிடம் யாரும் கேள்வி எழுப்பவில்லை. ஆனால், அவர் மனதில் என்ன இருக்கிறது? அவரது தகவல்களுக்கு அடிப்படை என்ன? ஆதாரம் என்ன என்பதையும் பொலிஸ் விசாரணை குழு, கேட்டறிந்து கொள்ள வேண்டுமோ என்ற கேள்வியும் எழுகிறது. அது அவரை சங்கடப்படுத்துவதற்காகவல்ல. மாறாக, அவரது தகவலின் உண்மைத் தன்மையை சரிபார்த்து அதில் தொடங்கி, விசாரணையை முன்னெடுக்கலாம் என்பதற்காகத்தான்.

இதுபோன்றே, கோட்டா, அநுர மற்றும் ரணில் உள்ளிட்ட அரசியல்வாதிகளின் நடத்தை மற்றும் நடவடிக்கைகள், கர்தினாலை அவர்கள் ஒவ்வொருவரும் சந்தித்து வந்ததுகூட, இந்த வழக்கில், அரசு மற்றும் பொலிஸாருக்கு எதிராகப் பயன்படுத்தப்படலாம். ஏன், கர்தினால் ரஞ்சித் ஆண்டகையை கூட நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டும் என்று குற்றவாளிகள் தரப்பில் சட்டப்படியான கோரிக்கை முன் வைக்கப்படலாம்.

### கள்ள மௌனம்

இந்தப் பின்னணியில், பிள்ளையானை பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைது செய்தது தொடர்பான தமிழ் தலைமைகளின் கள்ள மௌனம், அவர்களது கொள்கை

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# பொருமியவர்கள்..........

4ம் பக்கத் தொடர்ச்சி...........

பிடிப்பின்மையையே காட்டுகிறது. முன்பு, விடுதலை புலிகள் அமைப்பின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் அந்த சட்டத்தின் கீழ் தொடர்ந்து சிறையில் அடைத்துவைக்கப்பட்டபோது பொருமியவர்கள், இப்போது பம்முகிறார்கள்.

ஒன்றில், பிள்ளையானை தீவிரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்தது தவறு என்று அவர்கள் கூறவேண்டும். அல்லது. அவரை மட்டும் கைது செய்தது தவறல்ல என்ற ஒரு நிலைபாட்டை அவர்கள் அறிவிக்கவேண்டும். இதே நிலைமையை, தமிழ் தலைவர்கள், இனப்போர் காலகட்டத்தில், விடுதலை புலிகள் அமைப்பைவிட்டு பிரிந்து அரச படைகளுடன் சல்லாபித்த 'ஒட்டு குழுக்களுக்கும்' பொருந்தும். பொருந்தலாம்.

கடந்த காலங்களில், தொடர்ந்து சிறையில் வாடும் விடுதலை புலிகள் அமைப்பின் போராளிகளை சாதாரண சட்டத்தின் கீழே விசாரணை செய்து, நீதிமன்றின் முன் நிறுத்தலாம் என்பது தமிழ் சமூக-அரசியல் தலைமைகளின் வாதமாக இருந்தது. அப்படியென்றால், பிள்ளையான் போன்றோருக்கும் அந்த வாதம் பொருந்தும் அல்லவா?

தமிழ் தலைமைகள் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். இவர்கள் கூறினால் மட்டும், பொலிஸோ, அரச தரப்போ, பிள்ளையானை பிற சட்டங்களின் கீழ் விசாரணை செய்துவிட மாட்டார்கள். அரசியல் ரீதியாக, இந்த அரசிற்கு, பிள்ளையான், தூண்டில் புழு மட்டுமே. பெரிய மீன்கள் தூண்டிலில் சிக்கும் என்ற எதிர்பார்ப்புடனேயே இந்த விசாரணையை முடுக்கி விட்டுள்ளது.

## நியாய-தர்மங்கள்

தமிழர் தரப்பு நியாயம் அவ்வாறானதல்ல. அது கொள்கை ரீதியாகவே பார்க்கப்படும். அதற்கான நியாய- தர்மங்கள் உள்ளன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பின்வாங்கவேண்டும் என்ற கோரிக்கை உலகின் மிகப் பெரிய தீவிரவாதக் குழுவாகச் செயல்பட்ட விடுதலை புலிகள் அமைப்பின் உச்சகட்ட காலத்தில்கூட அவ்வப்போது தென்பட்ட வண்ணம் இருந்தது.

கிழக்கு மகாணத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கிய தலைவராக இருந்த ஜோசப் பரராஜசிங்கம் படுகொலையில் பிள்ளையானுக்கே முக்கிய பங்கு இருந்தது என்பதால்தான், தாங்கள் இவ்வாறன நிலைமையை எடுத்ததாக யாரும் சொல்லிவிட முடியாது. அதுதான் அளவு கோல் என்றால், தமிழ் அரசு கட்சியின் தலைவராகவே இருந்த அமிர்தலிங்கத்தையே படுகொலை செய்த விடுதலைப் புலிகள் அமைப்பையும் அதன் நிறுவன தலைவர் பிரபாகரனையும் எதிர்த்து இவர்கள் யாரும் ஏன் இன்றுவரை மூச்சு விடவில்லை?

இனப்போர் முடிந்து, விடுதலை புலிகள் அமைப்பு இல்லாதாகி பதினைந்து ஆண்டுகள் கடந்து விட்டன. என்றாலும், அவர்கள் செய்தது தவறு என்று, முன்பு சம்மந்தனும் சுமந்திரனும் மட்டுமே எப்போதாவது குரல் கொடுத்து வந்தனர். சம்மந்தன் காலத்திற்கு பின்னர் தமிழ் அரசு கட்சியின் உள்வீட்டு தலைமைத்துவ பிரச்சினையில் அதீத ஆர்வம் காட்டிய சுமந்திரன் தற்போது அடக்கியே வாசிக்கிறார். அது காலத்தின் கட்டாயமா, அல்லது ஆசையின் உச்சக்கட்டமா, என்பது அவருக்கே வெளிச்சம்.

எது எவ்வாறானாலும். இதுபோன்ற தலையாய கொள்கைப் பிரச்சினைகளில் தமிழ் தலைமைகள் சிறிது தீவிரமாகவே சிந்தித்துச் செயல்படவேண்டும். இப்போது, ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஜிபிஎஸ் பிளஸ் விடயத்தில் கோரிக்கை விடுத்துள்ள தமிழ் தலைவர்கள், அதன் இராஜதந்திரிகளை சந்திக்க நேர்ந்தால், பிள்ளையான் விடயத்தில் அவர்களது முரண்பாடான கருத்திற்கு விளக்கம் கேட்கப்படலாம். அப்போதாவது, அவர்களது சாயம் வெளுத்துவிடும்.

அதிலும் குறிப்பாக, உதய கம்மன்பில்ல போன்ற சிங்களப் பேரினவாத அரசியல் தலைவரே, பிள்ளையன் விசாரணை குறித்த விடயங்களை சிஐடி பொலிஸ் பணத்திற்கு விற்கிறது என்று குற்றம்சாட்டிய பிறகு, அந்த விசாரணையின் அடிப்டை குறித்தே சந்தேகங்கள் எழுவது இயல்பு.

அதிலும் குறிப்பாக, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கேவிற்கும் ஈஸ்டர் தாக்குதல்கள் விடயத்தில் ஏதோவொரு விதத்தில் தொடர்பு இருந்தது என்று வெளிவரும் 'தகவல்கள்'. விசாரணையின் நம்பகதன்மையை மேலும் குலைக்கிறது. அதிலும் குறிப்பாக, சிறையில் இருக்கும் பிள்ளையானோடு, ரணில் தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முயன்றார் என்றும், ஆனால் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது என்பதும் ரணிலின் அரசியல் குறித்து அறியாதவர்கள் வேண்டும் என்றே பரப்பும் வதந்தி என்றே எண்ணத்தோன்றுகிறது.

## முறைகேடான செயல்

பிள்ளையானின் வழக்கறிஞர் என்ற வகையில் அவரைச் சிறையில் சந்தித்த கம்மன்பில, பத்திரிகையாளர்களை ச்சந்திக்கிறார். அது முறைகேடான செயல். இந்த நிகழ்வு மட்டுமே பிள்ளையான் தரப்பு, இந்த விசாரணையை சட்டபூர்வமாக சந்திக்கும் அதேவேளையில், அதனை அரசியல் ரீதியாகவும் அணுகுகிறது என்ற எண்ணத்தை தோற்றுவித்துள்ளது.

விடுதலை புலிகள் அமைப்பு என்ற இயக்கத்தை அழித்தொழிக்க, கிழக்கு மாகாணத்தில், கருணாவுடன் சேர்ந்து பிள்ளையானே பிள்ளையார் சுழி இட்டார் என்று கம்மன்பில கூறுகிறார். பிள்ளையான், பதினான்கு வயதிலேயே, விடுதலைப் புலிகள் அமைப்பால் கடத்திச்செல்லப்பட்டு, கட்டாயப்படுத்தப்பட்டு, போராளியாகவும் (தீவிரவாதியாகவும்) மாற்றப்பட்டார் என்றும் அவருக்கு ஆதரவாக கம்மன்பில்ல ஒரு வாதத்தை முன்வைக்கிறார்.

ஏன் தன்னை மட்டும் அடுத்தடுத்து பதவியேற்ற அரசுகள் சிறையில் அடைத்து அல்லாட வைக்கின்றன என்று, பிள்ளையான் கண்ணீர் விட்டதாகக்கூட கம்மன்பில்ல கூறி உள்ளார். இது 'சென்டிமென்ட் பாலிட்டிக்'ஸின் உச்சக்கட்டம் என்றுகூட கூறலாம். என்ன, இன்றை அரசியல் சூழலில், கம்மன்பில்ல அஸ்தமித்த சூரியன். அல்லது உதிக்காமலே அஸ்தமித்த சூரியன். எனவே, அவரது வாக்கிற்கு இன்று விலை இல்லை. ஆனால், அவரையே யாராவது மேற்கோள் காட்டி, உச்சநீதி மன்றத்தை அணுகினால் கதை கந்தலாகிவிடும் சாத்தியங்கள் உள்ளன. அப்போது என்ன செய்வார்கள், இந்த தமிழ் தலைவர்கள்?



# மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து செயற்படுவதுதான் ரௌடித்தனம் எனில், நானும் ரௌடி என்பதில் மகிழ்ச்சி

## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவிப்பு



மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து செயற்படுவதுதான் ரௌடித்தனம் எனில், நானும் ரௌடி என்பதில் மகிழ்ச்சி என்று கடற்றொழில் மற்றும் நீரியல், கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கதலைமையில் யாழில் நேற்று(வியாழக்கிழமை) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்நிகழ்வில், தேசிய மக்கள் சக்தியின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், ஸ்ரீ பவானந்தராஜா, யாழ்.மாநகர சபையின் வேட்பாளர் சு.கபிலன் மற்றும் அமைப்பாளர்கள், வேட்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது -

'கடந்த காலங்களில் இலஞ்ச, ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட நபர்களுக்கு எதிராக சட்டம் செயற்படும். அவர்களின் முகவரி மகசின் சிறைச்சாலையென மாறுவது உறுதியாகும்.

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர்களும்கம்பிஎண்ணிவருகின்றனர். அதேபோல படுகொலைகளில் ஈடுபட்டவர்கள், ஆட்கடத்தல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகவும் சட்டம் செயற்படும்.

நாம் இவ்வாறு செயற்படும்போது தேசியமக்கள்சக்திஅரசியல்பழிவாங்கலில் ஈடுபடுவதாக கொக்கரிக்கின்றனர். எமக்கு எவருடனும் தனிப்பட்ட பிரச்சினை கிடையாது. குற்றமிழைத்தவர்களுக்கு மன்னிப்பும் கிடையாது. சட்டத்தை நாம் கையில் எடுக்கமாட்டோம். நீதிமன்றம் ஊடாகவே அதற்குரிய பணி இடம்பெறும்.

வடக்கிலும் மண் கடத்தல் காரர்கள் உள்ளனர், ஆள்களை கடத்தியவர்கள் உள்ளனர். ஊடகவியலாளர்களை கொலை செய்தவர்கள் இருக்கின்றார்கள். மக்களின் காணிகளை அபகரித்தவர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு எதிராகவும் வெகுவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்களின்நிம்மதியைசீர்குலைத்தவர்கள், தற்போது நடுங்க ஆரம்பித்துள்ளனர். சந்திரசேகரன் ரௌடி எனவும் கூறத்தொடங்கியுள்ளனர். என்னைரௌடி என அழைப்பது மகிழ்ச்சி. மக்களுக்காக செயற்படுகின்றபோது, மக்களுக்காக குரல் கொடுக்கின்றபோது, மக்களுக்காக எம்மை அர்ப்பணிக்கின்றபோது அதை பார்த்து ரௌடித்தனம் என்கின்றனர்.

இதுதான் ரௌடித்தனம் எனில் அதனை ஏற்றுக்கொள்ள நான் தயார். கடந்தகாலங்களில் ரணில் விக்கிரமசிங்கவின் பைல்களை தூக்கித் திரிந்தவர்கள்தான் இப்படி சொல்கின்றனர்.

புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டபோது அதனை வரவேற்றவர்கள், இன்றைக்கு தாங்கள்தான் புலிகள் அமைப்பின் அர்ப்பணிப்புமிக்க தலைவர்கள் எனக் கூறிக்கொள்கின்றனர். புலிகள் காலத்தில் துரோகி முத்திரை குத்தப்பட்டவர்கள் இவர்கள். -என்றார்.




# சமுர்த்தி வங்கியில் கடன் வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது

(ஸாகிர்)

சாய்ந்தமருது சமுர்த்தி வங்கியால் தொழிலை மேம்படுத்துவதற்கான அதிகப்படியான கடன் வழங்கும் திட்டம் நேற்று (வியாழக்கிழமை) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது லக்ஜே திட்டத்தின் மூலம் சுமார் 10 லட்சம் ரூபா பணத்தை தொழிலை மேம்படுத்தி, அத்தொழிலை சிறப்பாகக் கொண்டு செல்வதற்காக வழங்கப்பட்டது.

அந்தவகையில், சாய்ந்தமருதைச் சேர்ந்த தச்சுத்தொழிலாளி மீரா முகைதீன் பஸீல் என்பவர் தனது தச்சுத்தொழிலை மேம்படுத்துவதற்காகஇவ்வாண்டின்முதலாவது அதிகப்படியான கடன் திட்டத்தைப் பெற்றார்.

சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம் மற்றும் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.எஸ். ஹிதாயா, சமுர்த்தி வங்கி சங்க முகாமையாளர் எ.எம்.எம். றியாத், வலய உதவி முகாமையாளர் நௌஷாத், சமுர்த்தி வங்கி காசாளர் எம்.பீ.எம். அன்லைஸ் உட்பட பலரும் கலந்து கொண்டு இக்கடனை வழங்கி வைத்தனர்.

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த மீளாய்வுக் கூட்டமும் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம் தலைமையில் நேற்றைய தினம் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.





# வவுனியாவில் பாடசாலைகள் மட்ட உதைபந்தாட்ட போட்டி ஆரம்பம்

வவுனியா மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கம் நடத்தும் அமரர் சௌந்தநாயகம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வவுனியா ஜங்ஸ்ரார் விளையாட்டுமைதானத்தில்புதன்கிழமைஆரம்பமாகியது.

சங்கத்தின் இணைப்பாளர் இ.சற்சொரூபன் தலைமையில் இடம்பெற்று வரும் இப்போட்டிகளின் ஆரம்ப நிகழ்வில் முதன்மை அதிதியாக வவுனியா உதவிமாவட்ட செயலாளர் ம.சபர்ஜா கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக பிரதி கல்விப்பணிப்பாளர் பி.ஞானராஜ், ஆசிரிய ஆலோசகர் யூட் பரதமாறன், ஓய்வுநிலை உடற்கல்வி ஆசிரியை சாந்தினி சேவியர், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், அதிபர்களான ஜனகரன், ரெஜினோல்ட் மற்றும் அணி வீரர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த சுற்றுப் போட்டியில் பல்வேறு பாடசாலைகளை சேர்ந்த 16 வயதிற்குட்பட்ட ஆண், பெண் வீரர்களை கொண்ட உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றியிருந்தன.

குறித்த சுற்றுப் போட்டியின் இறுதி போட்டி நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. 100

காலைக்கதிர் Kalaikkathir

# உள்ளாட்சி தேர்தல் 2025

## மரச் சின்னத்திற்கு வாக்களித்து முஸ்லிம் காங்கிரஸின் கரத்தை பலப்படுத்துங்கள்

### கட்டான மக்கள் சந்திப்பில் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

(எஸ். சினீஸ் கான்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில், கட்டான பிரதேச சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிடும் வேட்பாளர் சஹ்ரானை ஆதரித்து, மக்கள் சந்திப்பு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

அவர் இதன்போது கருத்து தெரிவிக்கையில் -

அரசியலிலேயே உள்ளூராட்சி சபைகளின் அதிகாரம் முக்கியமான தொன்றாக காணப்படுகிறது. அதை கைப் பற்றுகின்ற போதுதான் எதிர்காலங்களில் மாகாணசபை மற்றும் நாடாளுமன்றம் போன்ற அதிகாரங்களைக் கைப்பற்ற முடியும்.

நீர்கொழும்பானது முதலாவது முஸ்லிம் மாகாண சபை உறுப்பினர் மர்ஹூம் அனீஸ் ஷரீப் அவர்களை பெற்ற பிரதேசம். ஆகவே அந்த பிரதேசம் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். கடந்த தேர்தலில் முற்பதாயிரத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்றும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற முடியாமல் போனது. ஆகவே எதிர்காலத்தில் எங்களுடைய நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைநீங்கள்பயன்படுத்தவேண்டும் என்பதோடு உச்ச அதிகாரங்களை பெற்றுக்கொள்ளவேண்டும்.

அதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும். எனவே, நீங்கள் அனைவரும் இந்தத் தேர்தலில் மரச்சின்னத்திற்கு வாக்களித்து முஸ்லிம் காங்கிரஸின் கரத்தைப் பலப்படுத்தவேண்டும். குறிப்பாக நீர்கொழும்பு மாநகர சபை அதிகாரத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக நமது கட்சியை மாற்றவேண்டும். அதேபோன்று கட்டான பிரதேச சபைத் தேர்தலிலும் எமது கட்சியில் பலத்தை அதிகரிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.

இந் நிகழ்வில் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் ஷாபி றஹீம், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், கம்பஹா மாவட்ட முக்கியஸ்தர்கள், கட்டான பிரதேச கட்சியின் மத்திய முழு உறுப்பினர்கள், ஊர்ப்பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

## நீர்கொழும்பில் தேர்தல் பிரசார பொதுக்கூட்டம்

### ஹிஸ்புல்லாஹ் பங்கேற்பு

(சினீஸ் கான்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் நீர்கொழும்பு மாநகர சபையில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மாபெரும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நீர்கொழும்பு பெருத்தோட்ட பிரதேசத்தில் புதன்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

இதன்போது, முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் ஷாபி றஹீம், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், பிரதேச மத்திய குழு உறுப்பினர்கள், நீர்கொழும்பு மாநகர சபை வேட்பாளர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துசிறப்பித்தனர்.





## கற்பிட்டி புதுக்குடியிருப்பில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு மகத்தான வரவேற்பளிப்பு

(சியாஜ்)

கற்பிட்டி பிரதேச சபை தேர்தலில் புதுக்குடியிருப்பு, டச்பே, முகத்துவார கிராமங்களை உள்ளடக்கிய பள்ளியாவத்தை வட்டாரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பாக மரச் சின்னத்தில் களம் இறங்கி இருக்கும் இளம் துடிப்பான வேட்பாளர் ஏ.ஆர்.எம் முஸம்மிலுக்கு புதுக்குடியிருப்பு கிராம மக்கள் மகத்தான வரவேற்பளித்தனர்.

கடந்த திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு கிராமத்து பெண்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி வரவேற்பு நிகழ்வில் கற்பிட்டி நகர தலைமை வேட்பாளர் ஏ.ஆர்.எம். முஸம்மில் மற்றும் பட்டியல்







வேட்பாளர் எம்.டி றிப்கான் ( றஹ்மானி) ஆகியோருடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கற்பிட்டி முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் வேட்பாளர்களுடனான சந்திப்பு!

(றிபாஸ்)



நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பில் காரைதீவு பிரதேச சபைக்குபோட்டியிடும் மாவடிப்பள்ளி, மாளிகைக்காடு வேட்பாளர்களுடனான சந்திப்பு புதன்கிழமை இடம் பெற்றது.

கட்சியின் பிரதி தலைவர் டாக்டர் ஷரீஃப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், பிரமுகர்கள் மற்றும் வேட்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## சட்டவிரோத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டுள்ளோம்.

வடக்கில் இருந்து பலர் புலம்பெயர் நாடுகளுக்கு சென்றுள்ளார்கள். அவர்கள் மீள நாட்டிற்கு வர வேண்டும். எமது நாட்டினை கட்டியொழுப்ப தங்கள் முதலீடுகளை நாட்டில் மேற்கொள்ள வேண்டும். கடந்த கால கசப்பான அனுபவங்களை மறந்து நாட்டை கட்டியெழுப்ப நாட்டிற்கு வருகை தரவேண்டும் என அழைப்பு விடுக்கிறோம்.

இந்த நாட்டில் கடந்த காலங்களில் பணம் உள்ளவர்களுக்கு ஒரு சட்டம் இல்லாதவர்களுக்கு ஒரு சட்டம் என சட்டங்கள் நடைமுறைப்படுத்துவதில் பாகுபாடு இருந்தது. இனிஅவ்வாறு இருக்காது. அனைவருக்கு சட்டம் பொதுவானதாக இருக்கும்.

தற்போது வடமத்திய மாகாணம் மற்றும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர்கள் சிறையில் உள்ளனர். பல அமைச்சர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் நடைபெறுகின்றன. முன்னாள் ஜனாதிபதியின் இரு மகன்களுக்கு எதிராகவும் நீதிமன்றில் வழக்குகள் நடைபெறுகின்றன.

குற்றம் செய்த யாரும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக்க முடியாது. வெளியில் உள்ள முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன

நாம் ஒரு புது அத்தியாயத்தை தொடங்கியுள்ளோம். ஜனாதிபதி , நாடாளுமன்றில் அறுதி பெரும்பான்மை என்பன எங்கள் கைகளில் உண்டு. ஆனால் கிராமத்தை கட்டியொழுப்ப எமக்கு மக்கள் ஆதரவு வேண்டும்.

கடந்த காலங்களில் தெற்கு மக்களை சந்தித்து அவர்கள் பிரச்சனை தொடர்பில் அறிந்து கொண்ட அளவுக்கு வடக்கு மக்களை நாம் சந்தித்து அவர்கள் பிரச்சினைகளை அறியவில்லை எனும் உண்மையை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் வடக்கு மக்கள் எங்களை நம்பியுள்ளீர்கள். கடந்த பொதுத் தேர்தலில் எங்கள் கைகளைப் பிடித்துப் பலப்படுத்தியுள்ளீர்கள். எங்கள் கைகளை மேலும் பலப்படுத்துங்கள். உங்கள் கைகளை நாம் இறுகப் பற்றிக்கொண்டுள்ளோம்.

உங்கள் பிரச்சினைகளைப் படிப்படியாகத் தீர்த்து வைத்து, நாட்டில் சகோதரத்துவத்தை ஏற்படுத்துவோம் என உறுதி அளிக்கிறேன் - என்றார்.

## ரூபா 3 கோடி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3 கோடி 28 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பணம், தங்க வளையல்கள், காதணிகள் மற்றும் கழுத்தணிகள் அடங்கிய தங்க நகைகள் ஆகியன கண்டுபிடிக்கப்பட்டன.

பணம், நகைகளைக் கைப்பற்றிய அதிரடிப் படையினர் சந்தேகநபர்கள் ஐவரையும் கைது செய்தனர். அவர்களில் மேற்கு மாகாண பொலிஸ் புலனாய்வுத் தலைமையகத்தைச் சேர்ந்த ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவரே காரைச் செலுத்திச் சென்றுள்ளார்.

விசாரணையின் போது பொலிஸ் கான்ஸ்டபிள் தெரிவித்த விரவங்கள் ஒன்றுக்கொன்று முரணாக இருந்ததால் சந்தேகம் ஏற்பட்டதாக அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

## திசைகாட்டிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

இன்று எமது நாட்டில் ஆட்சிக்கு வந்துள்ள ஜே.வி.பி ஆட்சியாளர்கள் மக்களை ஏமாற்றி, தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை மீறி நடந்து வருகிறது. ஒட்டுமொத்த மக்களையும் ஏமாற்றி வருவதை மக்கள் இன்று நன்கு உணர்ந்துள்ளனர்.

விவசாயப் பகுதிகளில் அடுத்த போகத்துக்குரிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. என்றபோதிலும் உர மானியம் இதுவரை அவர்களுக்குக் கிடைக்கவில்லை. பயிர் சேதங்களுக்கு இழப்பீடுகளோ கிடைக்கவில்லை. யானை மனித மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களின் பயிர்கள், உடமைகள் மற்றும் உயிர் சேதங்களுக்கு இன்னும் இந்த ஆளும்தரப்புத் தீர்வு காணவில்லை.

இம்முறை உரங்களின் விலையும் அதிகரித்துவரும் சூழ்நிலையில் விவசாயிகளைப் பாதுகாப்போம், விவசாயியைக் கடவுளாகக் கருதுகிறோம் என்று கூறிய திசைகாட்டி தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியினர் ஒட்டுமொத்த விவசாய சமூகத்தினரையும் அழிக்கும் கொள்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

இன்று மக்கள் வாழ முடியாத அளவுக்கு பொருட்களின் விலைகள் அதிகரித்து காணப்படுகின்றன. பொது மக்களுக்கு ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மூன்று வேளை உணவு கூட சாப்பிட முடியாத நிலையை நாடு எட்டியுள்ளது. அத்தியாவசிய உணவுமற்றும் பாடசாலை பொருட்களுக்கான ஏயுவு வரிகளும் விதிக்கப்பட்டுள்ளன. மேலும், அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரிசி, பால் மா, தேங்காய், உப்பு ஆகியவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளன.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி திசைகாட்டிக்கு அதிகாரம் கிடைக்காத சபைகளுக்கு நிதி ஒதுக்க மாட்டோம் என கூறி மக்களை ஏமாற்றி வருகின்றார். பொய், ஏமாற்று அடிப்படையிலான அரசியலுக்கு அதிக ஆயுட்காலம் இல்லை. மின்கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைப்போம் என்று இந்த ஆளும் தரப்பினர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் கூறினர். மக்கள் எழுச்சியால் தான் 20 சதவீதம் கூட மின்கட்டணம் குறைக்கப்பட்டன. அரசாங்கம் தீர்மானம் எடுத்து இதனை நிறைவேற்றவில்லை.

மக்களின் கருத்துக்களுக்கு ஏற்பே இது குறைக்கப்பட்டது. எஞ்சிய 13 சதவீத குறைப்பை இந்த ஆளும்தரப்பு விரைந்து எடுக்கவேண்டும். எரிபொருள் விலைகள் தொடர்பில் ஆளும்தரப்பு இவ்வாறான கொள்கைகளை பின்பற்றி வருகிறது. புதிய ஆளும்தரப்பில் மக்கள் கண்ட பயன் எதுவும் இல்லை. பொய்களை கொண்டு மக்களை ஏமாற்றி வரும் இந்த அரசியலைக் கண்டு மக்கள் ஏமாந்துவிடக்கூடாது.

## 35 வருடங்களாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் விஞ்ஞாபனத்தில் அனைவரும் சமமாகவும் சமத்துவமாகவும் நடத்தப்படும் புதியதோர் இலங்கையை உருவாக்குவதாக வாக்குறுதி அளித்துள்ளது. ஜனாதிபதி தேர்தல் முடிந்து 6 மாதங்கள் ஆகியும் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து 5 மாதம் கழிந்தும் புதிதாக காணிகள் விடுவிக்கப்படவில்லை. மக்களின் துன்பத்தை தமது அரசியலுக்கு தேசிய மக்கள் சக்தி பயன்படுத்தாது என்று கூறியிருந்தாலும் இனவாதமற்ற அரசியலை ஏற்படுத்துவதாக வாக்குறுதி அளித்திருந்தாலும் சிங்கள மக்கள் கூட ஆதரிக்கும் பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதில் ஏன் தாமதம்?

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன் வடக்கு மக்களின் வாக்குகளை பெற்ற நீங்களும், உங்களது அரசும் உயர்பாதுகாப்பு வலயத்தில் இருக்கும் மக்களின் காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தும் அதேநேரம் பின்வரும் கோரிக்கைகளை உங்களுக்கும். உங்கள் அரசுக்கும் முன்வைக்கிறோம்.

வலி. வடக்கில் முப்படையினரதும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கையகப்படுத்தப்பட்டுள்ள அனைத்து காணிகளையும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும், 1983 ஆம் ஆண்டு முதல் விமான நிலைய விஸ்தரிப்புக்கென கையகப்படுத்தப்பட்டும் இதுவரை எந்தவித பயன்பாடோ அபிவிருத்தியோ செய்யப்படாத காணிகள் உரிமையாளரிடம் கையளிக்கவேண்டும்.

ஜனாதிபதி மாளிகை மற்றும் தையிட்டி விகாரை போன்ற காணிகள் தொடர்பாக விசேட அவதானம் எடுத்து நீதியான முறையில் உரிமையாளர்களின் கோரிக்கைக்கு அமைவாக காணிகள் மீளளிப்பதற்கான வெளிப்படையான நீர்வொன்றை முன்வைக்க வேண்டும்.

தற்போது அரசின் அமைப்புகளால் கையகப்படுத்தப்பட்டு அல்லது பயன்படுத்தப்படும் அனைத்து காணிகள் மற்றும் அவற்றின் உரிமையாளர்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய முழுமையான வெளிப்படையான அறிக்கை ஒன்றை பொதுமக்கள் பார்வைக்கு வெளிப்படுத்த வேண்டும்.

விடுவிக்கப்பட்ட காணிகளை பாதிக்கப்பட்ட மக்கள் தங்களை பாதுகாப்பதும் பராமரிப்பதில் உள்ள சவால்களை நீதியானதும் மனிதாபிமான முறையில் கையாண்டு காணிகளை பாதுகாப்பதற்கும் எல்லைகளை நிர்ணயிப்பதற்கும் குறைந்தது வேலி போட்டு மின்சார இணைப்புக்களை பெற அரச நிதி ஒதுக்கீடு செய்து கட்டம் கட்டமாக அமுல்படுத்தப்படவேண்டும்.

இந்த பகுதிகளில் மக்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளது என்பது அனைவருக்கும் தெரிந்தஉண்மையே. ஆகையால் நீதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வாக்குறுதி அளித்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசு காணிகளை விடுவிப்பதுடன் குறைந்தது வீடுகளை மீளக் கட்ட அல்லது புனரமைக்க திட்டமிடல் செய்து வருடாந்தம் இதற்கான நிதியை வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்தல்வேண்டும்.

இந்திய மீன்பிடிப்படகுகளின் அத்துமீறல் காரணமாக எமது மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி அனைவரும் அறிவார்கள். அதேநேரம் 1981 ஆம் ஆண்டு வடக்கு மக்களுக்காக கட்டப்பட்டு 2017 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட மயிலிட்டி மீன்பிடி துறைமுகம் மற்றும் மயிலிட்டி உட்பட வடபகுதி மீனவர்களின் தேவைக்கு பயன்படுத்த உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கையகப்படுத்தப்பட்ட இந்திய இழுவைப்படகுகள் மற்றும் தென்பகுதியிலிருந்து வரும் பெரிய மீன்பிடிபடகுகள் குறைக்கப்பட்டு உள்ளூர் மீனவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும், மயிலிட்டி துறைமுகம் மயிலிட்டி மீனவர் சங்கத்தின் பராமரிப்பிற்கு வழங்கப்படவேண்டும். மீன்பிடி துறைமுகங்கள் நாடெங்கும் மீனவர் சங்கங்களின் முகாமையிலேயே உள்ளன. இருந்தபோதும் மயிலிட்டி துறைமுகம் இலங்கை துறைமுக கூட்டுத்தாபனத்தின் பொறுப்பிலும் கடற்படையின் கட்டுப்பட்டிலேயே இதுவரை உள்ளது. மயிலிட்டி துறைமுகத்தின் நிர்வாகம் உடனடியாக மீனவர் அமைப்புகளிடம் கையளிக்கப்பட வேண்டும்.

காங்கேசன்துறை, கீரிமலை வீதி மற்றும் கட்டுவன், வசாவிளான் வீதி உட்பட மூடப்பட்டுள்ள அனைத்து வீதிகளும் உடன் திறப்பதுடன் அந்த வீதிகள் ஊடாக பொதுமக்கள் பயணம் செய்வதற்காக இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

நல்லிணக்க அடிப்படையில் தமது கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் அழித்து சேதமாக்கப்பட்ட அனைத்து மத ஆலயங்கள் மற்றும் கோவில்களை விடுவித்து அரச செலவில் மீள் புனரமைப்பு செய்வதை அரசு உடனடியாக ஆரம்பிக்கவேண்டும். எனவே ஜனாதிபதி மற்றும் பிரதமர் மட்டுமல்லாமல் தேசிய மக்கள் சக்தியின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தற்போது உள்ளூராட்சி மன்றங்களில் தமது தமிழ் மக்களுக்கு தேசிய மக்கள் சக்தி அரசு நீதியையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் என்று நம்பி களம் இறங்கியுள்ள வேட்பாளர்கள் அனைவரிடத்திலும் நாம் இந்த கோரிக்கையை முன்வைக்கின்றோம். இந்த கோரிக்கைகளில் தேர்தலின் முன் இலகுவாக நிறைவேற்றக் கூடிய விடயமான மக்களின் அனைத்து காணிகளையும் உடன் விடுவிக்கக் கோரி சம்பந்தப்பட்ட அனைவரிடமும் பகிரங்க கோரிக்கை முன்வைக்கின்றோம்.

அத்துடன் இவ்விடயத்தில் தீர்வினை நடைமுறைப்படுத்தவதற்கு உரிமையாளர்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தி வெளிப்படையான பேச்சு நடத்த முன்வருமாறும் கேட்டுக்கொள்ளுகின்றோம் - என்றுள்ளது.



# உள்ளாட்சி தேர்தல் 2025

## தென்னிலங்கைக் கட்சிகளை மட்டுமன்றி

# போலித் தமிழ்த் தேசிய கட்சிகளையும் தமிழ்க் கட்சிகள் நிராகரிக்கவேண்டும்

## ஐங்கரநேசன் வேண்டுகோள்

தமிழ்க் கட்சிகள் எல்லாமே உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டாம் என்று மக்களைக் கேட்டுவருகின்றன. ஜே.வி.பியை மாத்திரம் அல்ல் தென்னிலங்கைக் கட்சிகள் எதையுமே நாம் ஆதரிக்க முடியாது. தென்னிலங்கைக்கட்சிகளைநிராகரிக்கும்அதேசமயம் போலித் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் தமிழ் மக்கள் நிராகரிக்கவேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியலை வியாபாரப் பண்டமாக்கி மக்களை ஏமாற்றிப்பிழைக்கும் தமிழ் அரசியற் கட்சிகளையும் மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வலி.வடக்கு பிரதேசசபைக்கு சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்ற தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்களை அறிமுகம் செய்துவைக்கும் கூட்டம் புதன்கிழமை மல்லாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஐங்கரநேசன் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

ஜனாதிபதித்; தேர்தலின்போதும் நாடாளுமன்றத் தேர்தலின்போதும் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களில் கணிசமானோர் ஜே.வி.பி என்னும் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கிறார்கள். தமிழ்த் தேசிய அரசியற் பயணத்தில் ஒரு பின்னடைவாக வடக்கு கிழக்கில் ஜே.வி.பி காலூன்றியமைக்கு எமது வாக்காளர்களைக்

குற்றம் சாட்டுவது எவ்விதத்திலும் ஏற்புடையது அல்ல. எங்கள் கைவிரல்களாலேயே எங்கள் கண்களைக் குத்துவது போன்று தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளே தென்னிலங்கைப் பேரினவாதக் கட்சிகளுக்;குத் தமிழ் மக்களைவாக்களிக்கப் பழக்கினார்கள்.

முள்ளிவாய்க்காலில்போர்முடிவுறுத்தப்பட்டவுடன் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைவர் இரா.சம்பந்தன் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் வரலாற்றுப் பிழையான முடிவை எடுத்தார். முள்ளிவாய்க்கால்வரை போரை முன்னின்று நடத்திய சரத் பொன்சேகாவுக்கு தமிழ் மக்களை அவர் வாக்களிக்க வைத்தார். இதன் மூலம் போர்க் குற்றவாளி என்ற குற்றச்சாட்டிலிருந்து நாமே அவரை விடுதலை செய்தோம். இதன் விளைவாகவே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எப்போதுமே எதிரான நிலைப்பாடுகளை எடுத்து வந்த ஜே.வி.பிக்கு இன்று தமிழ் மக்கள் வாக்களிக்கத் தலைப்பட்டுள்ளார்கள்.

எம்மத்தியிலுள்ளபலதமிழ்க்கட்சிகள்உதட்டளவில் தமிழ்த் தேசியம் பேசுவனவாகவும் மனதளவில் பேரினவாதக் கட்சிகளை விசுவாசிப்பனவாகவுமே உள்ளன. மதுபான விற்பனை அனுமதிப் பத்திரங்களை இலஞ்சமாகப் பெற்றும், பன்னாட்டு நிறுவனங்களிடம் பல கோடிகளைப் பெற்றும், மத்திய அரசின் பாதீடுகளை ஆதரித்தும் தமிழ்த் தேசிய விரோத நிலைப்பாடுகளை எடுப்பதற்கு இக்கட்சிகள் ஒருபோதும் தயங்கியதில்லை. தமிழ் மக்கள் இத்தேர்தலில் தென்னிலங்கைக் கட்சிகளோடு இப்போலித் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் சேர்த்தே நிராகரிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## பிரதேச சபைத் தேர்தல் தொடர்பாக இளைஞர்களுக்கான விசேட கூட்டம்

(முஹம்மட் றிபி)

காரைதீவு பிரதேச சபைத் தேர்தல் தொடர்பான இளைஞர்களுக்கான விசேடகூட்டம்மாவடிப்பள்ளிஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளரும் காரைதீவு பிரதேசசபை மாவடிப்பள்ளி வட்டார வேட்பாளருமான எம்.என்.எம்.ரனீஸ் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொருளாளரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயருமான ரஹ்மத் மன்சூர், கட்சியின் உச்சபீட உறுப்பினரும், அம்பாறை மாவட்ட செயலாளருமான ஏ.சி.சமால்தீன், காரைதீவு பிரதேச சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள், பட்டியல் வேட்பாளர்கள் மற்றும் மாவடிப்பள்ளி பிரதேச இளைஞர்களும் கலந்து கொண்டனர்.






## உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களை ஆதரித்து ரிசாத் பதியுதீன் களத்தில்

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் போட்டியிடும் புல்மோட்டை மற்றும் குச்சவெளி வேட்பாளர்களை ஆதரித்து பிரசார நிகழ்வொன்று நேற்று (வியாழக்கிழமை) இடம் பெற்றது.





அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து இடம் பெற்ற குறித்த கூட்டங்களில் குறித்த கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் கலந்து கொண்டார்.

### உயிர்த்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அனைத்து மாகாணங்களுக்கும் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உள்ளிட்டவர்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பணிப்புரைகளைபதில்பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய வழ ங்கியுள்ளார்.

அதன்படி, அதிக மக்கள் கூட்டம் காணப்படும் என்று எதிர்பார்க்கப்படும் தேவாலயங்களை அடையாளம் கண்டு, அந்த இடங்களில் மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களில் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறும்விசேடபோக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அவர் பணித்துள்ளார்.

### வேறு கட்சிகளிடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருத்திவைத்துக்கொண்டுநடத்தியகூட்டத்தில் அவர் இந்த மிரட்டலை விடுத்தார்.

''பிரதேச சபைகளில் இருந்து வரும் முன் மொழிவுகளில் இருந்தே கிராமத்தை கட்டி எழுப்ப முடியும். பிரதேச சபைகள் நகர சபைகள் மாநகர சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி நடந்தால் அவர்களின் முன் மொழிவுகளை கண்களை மூடிக்கொண்டு ஏற்று அதற்கு நிதிகளை ஒதுக்குவோம். வேறு யாருடைய கைகளில் சபைகள் சென்றாலும் அவர்களின் முன் மொழிவுகளை பத்து தடவைகளுக்கு மேல் யோசனை செய்தே நிதி ஒதுக்குவோம்.

கடந்த காலங்களில் பல ஊழல்கள் இடம்பெறன என்பதே அதற்கான காரணம். ஆனால் தேசிய மக்கள் சக்தி ஊழலற்ற ஆட்சி. மத்தியில் ஊழலற்ற ஆட்சி காணப்படும்போது, கிராம அபிவிருத்திகளில் ஊழல் செய்ய முடியாது. எனவே தேசிய மக்கள் சக்திக்கு வாக்களியுங்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள 17 சபைகளையும் எமக்கு தாருங்கள்'' ஷ்-என்றார் அவர்.

காலைக்கதிர் Kalaikkathir

உ

முருகன் துணை

## நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# அறுபது ஆண்டு காலத்திற்கு மேலாக வேத சிவாகமப் பாடசாலை அமைத்துப் பெரும் பணி செய்த தர்மசாஸ்தா குருகுல முதல்வர்

கடந்த பல தசாப்தங்களாக இலங்கையில் நிலவிய உள்நாட்டுப்போர், இடப்பெயர்வு என்பவற்றுக்கு இடையிலும் குருகுலமரபு வழியில் வேத சிவாகமக்கல்வி இன்றைக்கும் ஓரளவேனும் செழிப்புற்று உள்ளது.

இன்றைக்கும் உலகின் பல பாகங்களிலும் இலங்கையைச் சேர்ந்த சிவாச்சார்யர்கள், அந்தணோத்தமர்கள் சிறப்பாக கிரியைகளை ஆற்றி வருகிறார்கள்.

வேத, சிவாகம ஆராய்ச்சிகளும், இத்துறையில் புதிது புதிதாக நூல்களும் உருவாகின்றது.

இந்த எழுச்சிக்கு, இணுவிலில் தர்மசாஸ்தா குருகுலம் அமைத்து அறுபது ஆண்டுகளுக்கு மேலாக அர்ப்பணிப்பான பணியாற்றிகடந்த25.03.2025பங்குனிமாதஏகாதசியோடுகூடிய திருவோணநாளில்சிவபதமடைந்த தா.மஹாதேவக்குருக்களின் பங்கும் பணியும் மிகவும் முக்கியமானது.

தமிழகத்தில் இன்றைக்கும் காஞ்சி, மயிலாடுதுறை, திருப்பரங்குன்றம், பிள்ளையார்பட்டி, தருமபுரம், சீர்காழி, தூத்துக்குடி, காரைக்கால் போன்ற பல்வேறு இடங்களில் வேத சிவாகம பாடசாலைகள் உள்ளன.

இதேபோல,இலங்கைத்திருநாட்டிலும்மஹாதேவக்குருக்கள் அவர்கள் ஒரு பாடசாலையை நிறுவனரீதியாக அன்றி, தனது தனிப்பட்ட ஆளுமைத்திறத்தாலும் தம் குடும்பத்தவரின் ஒற்றுமையான பணிகளாலும், முழுமையான இலவசக்கல்விமுறையாக நடாத்தி வந்திருக்கிறார் என்பது ஆச்சர்யமான ஒரு விடயம் ஆகும்.

1995ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் பெருப்பகுதி யாழ்ப்பாண மக்கள் இடப்பெயர்வையும் பெரும் அவலத்தையும் சந்தித்தனர். இவ்வாறான ஒரு சூழலில் மஹாதேவக்குருக்கள் குடும்பமும் அவரது பாடசாலைச்சமூகமும் கூட, இதே துயரத்தை ஏற்று தென்மராட்சியின் உசன் பகுதிக்கு இடம்பெயர்ந்தது.

அங்கும் கூட, குண்டு மழைக்குள்ளும் இலவச வேத, ஆகம வகுப்புகளும், பகவத்கீதை வகுப்புகளும் நடந்தமை வியப்பானது. அந்த வேளைகளில் ஏழெட்டு வயதாக இருந்த நானும் அந்த வகுப்புக்களில் கல்வி கற்றிருக்கிறேன்.

அன்று தொட்டு அவரது சிவப்பேறு வரை குருக்களுடன் எமக்கு இணைப்பு இருந்தது.

ஒரு ஆசிரியனுக்குரிய அத்தனை பண்பு நலன்களும்



கொண்டு திகழ்ந்த வேத சிவாகமப் பேராசான்– ஆகிய மகாதேவக்குருக்களை ‘வாத்யார்‘ என்றே போற்றுதலுடன் அழைப்பது ஈழத்து குருமார் மரபு.

எண்பத்தைந்து வயதினும் அதிகமாக வாழ்ந்த அவர்கள் எப்போதும் படிப்பதிலும் படிப்பிப்பதிலும் தேடுவதிலும் தட்டிக் கொடுத்து ஊக்குவிப்பதிலும் தாராளமானவராகவே திகழ்ந்தவர்.

மிகவும் நலிவுற்றிருந்த கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன் வரை எனது எழுத்துக்களைக் கூட படித்து வந்திருந்தார். முக்கிய வைதிக சைவப் பதிவு எனில், அடுத்த நாள் காலையில் தானே கைப்பேசியில் தொடர்பு கொண்டு அது பற்றிப் பேசுவார்.

போன் கோலிலேயே மிக அபூர்வமான வடமொழிச் சுலோகங்களைச் சொல்லி அதற்கு விசேஷ அர்த்தமும் சொல்லி பேசுவார்.

ஒரு முப்பது வருஷத்திற்கு மேல் வாத்யாரை பார்த்து வருகிறேன். எப்போதும் தம் மாணவனின் உயர்வில் அக்கறை உள்ள ஒரு ஆச்சார்யர் அவர்.

போரும் இடப்பெயர்வும் அழிவும் மரணமும் நிரம்பிய மண்ணில் சுமார் அறுபது ஆண்டு காலம் தொடர்ச்சியாக பரோபகாரமாக / இலவசமாக வேத சிவாகம குருகுலத்தை அவர் நடாத்தியிருக்கிறார்.

ஆனால், அதற்கான பெரிய அங்கீகாரங்களும் அவருக்கு கிடைக்கவில்லை. வேத சிவாகம கற்கையை கலை என்று அங்கீகரிக்காததால் அரச அமைப்பு சார் கௌரவங்கள் கிடைத்தில. அதற்கு அவர் கவலைப்படவும் இல்லை. அவரிடம் தன் பணியை வலுச்சேர்க்கும் உறுதியான ஆவண சேமிப்பும் இல்லை.

எனினும் உலகே அவர் பணியின் பயன் அறியும். இதற்கு முன்னும் எத்தனையோ பேர் இருந்திருப்பர். இனியும் வரலாம். ஆனால் இவர் போல் ஒருவர் எங்கே தேடலாம்?

தருமை ஆதீனம், சிவபுரம் பாடசாலை போன்ற தமிழக ஆன்மீக அமைப்புக்களின் கௌரவம் அண்மைய ஆண்டுகளில் அவருக்கு கிடைத்திருந்தது. காஞ்சி காமகோடி பீடாதீஸ்வரர் சங்கராச்சார்யார் அவருக்கான கௌரவிப்பில் இணைய வழியில் நேரே இணைந்து ஆசி வழங்கியமையும் வாத்யாருக்கு மகிழ்ச்சி தந்திருந்தது.

ஆனாலும் பல்கலைக்கழகம் கொண்டாட வேண்டிய ஒரு மாமேதை அவர் என்பதில் எனக்கு ஐயமே இல்லை.

வாத்யார் ஒரு பண்டித மரபின் வாரிசு அல்ல. அவரது தந்தையார் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் திருமடைப்பள்ளியில் பெருமானுக்கு நெய்வேத்யம் சாதிக்கும் பணியில் இயங்கியவர். மிகுந்த வறுமை. என்றாலும் தொடர் முயற்சியின் விளைவாய் இன்று வாத்யார் ஒரு பெரும் மாணவ பரம்பரையை உருவாக்கி மறைந்திருக்கிறார்.

அவருடைய வேத–ஆகம–சாஸ்த்ர–சம்ஸ்க்ருத புலமைக்கு அப்பால் அவர் பெரிய கலாரசிகர்.

இசை– நடனம்– சிற்பம்– சமையல் எல்லாவற்றையும் அவர் இரசிப்பார். அதிலும் ஊக்குவிப்பார். இப்படி எவ்வளவும் சொல்லலாம்...

அவரது ஆத்மா வேத சிவாகம நெறி தொடர எம்மை ஆசீர்வதிக்க வேண்டுவோம்..

**தி.மயூரகிரிக்குருக்கள்**







# மக்களின் வரிப் பணமே மாகாண அபிவிருத்திக்கான ஒதுக்கீட்டு நிதி

## ஆளும் கட்சி உரிமை கோரமுடியாது என்கிறார் சத்தியலிங்கம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறும்அவ்வாறுசெய்யாவிட்டால் ஒதுக்கப்பட்ட நிதியை கையாள்வதில் தடைகள் ஏற்படுமென மிரட்டல் தொனியில் அமைச்சர்கள் தேர்தல் பிரசாரம் செய்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

மன்னாரில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்ட மத்திய சுற்றாடல் அமைச்சர் இந்த வருடம் பாதீட்டில் இதுவரை எந்த அரசாங்கங்களும் செய்யாத அளவிற்கு வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக நிதியொதுக்கியுள்ளோம்.

இந்த நிதியை முறையாக அபிவிருத்தி பணிகளுக்கு பயன்படுத்த வேண்டுமாக இருந்தால் தேசிய மக்கள் சக்தி அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆட்சியை கைப்பற்ற வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால்இந்தநிதியைசெலவளிப்பதில் தடைகள் ஏற்படலாம். ஆகவே மக்கள் தேசிய மக்கள் சக்தி வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இது மிகமோசமான பிரச்சாரயுக்தியாகும். ஒருநாட்டின் அரசாங்கத்தால் மாகாணங்களின் அபிவிருத்திக்காக நிதியொதுக்கீடு செய்வது ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் கடமையாகும். அதனை அவர்கள் தவிர்க்க முடியாது.

வடக்கு மாகாணம் இலங்கையில் தான் அமைந்துள்ளது. வடக்கு மாகாணம் நான் அறிந்தவரையில் தனிநாடல்ல. அப்படிப் பார்த்தால் கடந்த 30 வருடங்களாக நடைபெற்ற கொடிய யுத்தத்தால் உட்கட்டுமானங்கள் நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படாதுள்ளன. அங்குள்ள மக்களின் தேவைகள் நாட்டின் ஏனைய மாகாணங்களில் வாழுகின்ற மக்களின் தேவையைவிட வேறுபட்டது.

ஆகவேவடக்குமாகாணத்திற்குவிசேடமாக அதிக நிதி ஒதுக்கீடுகளை இந்த அரசாங்கம் செய்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நிதியொதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. இந்த நிலையில் உங்களுக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளோம். அதனை முறையாக பயன்படுத்த எங்களுக்கு மட்டுமே நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்று கூறுவதன் அர்த்தம் நீங்கள் வேறு யாருக்காவது வாக்களித்தால் அந்த நிதியை நாங்கள் விடுவிக்கமாட்டோம் என்றே அர்த்தப்பட வேண்டியுள்ளது.

மத்திய அரசால் மாகாணங்களின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதியானது இந்த நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கு சொந்தமானது. அதனை அனுபவிக்க அனைத்து மக்களிற்கும்

உரிமையுள்ளது. அதுவே ஜனநாயகம். பாதீட்டு நிதி என்பது தேசிய மக்கள் சக்தியின் கட்சி நிதியோ ஜனாதிபதியின் சொந்த நிதியோ அல்ல. இந்த நாட்டு மக்களின் வரிப்பணத்திலிருந்து

பெறப்படுகின்ற நிதியாகும்.

எனவே இவ்வாறான மிரட்டும் தொனியிலான பாணியில் தேர்தல் பிரசாரம் செய்வதை தமிழ் மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அமைச்சரின் மிரட்டலுக்கு

சரியான பதிலை எதிர்வரும் தேர்தலில் வாக்குப் பலத்தினால் தமிழ் மக்கள் காட்டுவார்கள் என குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 100


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# காலத்துடன் இணைந்து மாற்றங்களை நாங்கள் எதிர்கொண்டு வருகின்றோம்

## ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

காலத்துடன் இணைந்து பல மாற்றங்களை நாம் எதிர்கொண்டு வருகின்றோம் என வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்குமாகாணகல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறைமற்றும்இளைஞர்விவகார அமைச்சின், பண்பாட்டலுவல்கள் அலகின் ஏற்பாட்டில் விளையாட்டுத் திணைக்களம், சுற்றுலாப்பணியகம் மற்றும் வலி. தெற்கு பிரதேச சபை இணைந்து நடத்திய வடக்கு மாகாண சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் - 2025 நிகழ்வு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் புதன்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் -

போர்த் தேங்காய், கிட்டிப்புள்ளு போன்ற விளையாட்டுக்கள் இன்றைய சிறுவர்களுக்குத் தெரியுமோ தெரியவில்லை. அப்படி மறந்துபோகின்ற எங்கள் பாரம்பரிய விளையாட்டுக்களை நினைவூட்டி அடுத்த தலைமுறைக்கு கடத்தும் வகையில் இந்தப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தை ஒழுங்கு செய்தமைக்காக பாராட்டுகின்றேன்.

காலத்துடன் இணைந்து பல மாற்றங்களை நாம் எதிர்கொண்டு வருகின்றோம். பல விளையாட்டு நிகழ்வுகள் அருகிச் செல்கின்றன. பல விளையாட்டுகளை மறந்தே போய்விட்டோம். நடைபெறுகின்ற விளையாட்டு நிகழ்வுகளில்கூட இளையோர் பங்கேற்பும் மிகக் குறைந்துள்ளது.

பாடசாலை மாணவர்கள், பாடசாலை அதன் பின்னர் தனியார் கல்வி நிறுவனம் என்று தமது நாளைச் செலவிடுகின்றனர். இல்லையேல்வீட்டில்இருந்துஅலைபேசியைப் பயன்படுத்துகின்றனர். இப்படியிருந்தால் அவர்களால் எப்படி விளையாட்டில் ஈடுபட முடியும்?

உண்மையில் மிகச் சிறப்பான நிகழ்வை வடக்கு மாகாண கல்வி அமைச்சும், பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் ஏற்பாடு செய்திருக்கின்றன. தமிழ் - சிங்கள மாணவர்கள், கலைஞர்களை ஒருங்கிணைத்து செயற்படுத்தியிருக்கின்றார்கள்.

மறந்துபோகின்றஎங்கள்பாராம்பரியங்களை நினைவூட்டும் வகையில் இந்தக் கொண்டாட்டத்தை ஒழுங்குபடுத்தியிருப்பது மகிழ்வைத்தருகின்றது.

எப்போதும் புத்தாண்டு பிறக்கும்போது நாம் சிறப்பாக அந்த ஆண்டு அமையவேண்டும் என்பதற்காகஆலயங்களில்வழிபாடுசெய்வோம். பிறந்திருக்கின்ற சித்திரைப்புத்தாண்டு எமது மாகாணத்தில் அபிவிருத்திகள் நடந்தேறி மக்கள் சந்தோசமாகவாழ்வதற்குவழிசெய்யவேண்டும். கனவுகளை நிறைவேற்றுகின்ற ஆண்டாக இது அமையவேண்டும். - என்றார்.

சித்திரைப்புத்தாண்டுக் கொண்டாட்ட நிகழ்வில் பங்கேற்ற ஆளுநர் இன்னிய வாத்திய இசையுடன் அழைத்துச் செல்லப்பட்டார். அத்துடன் தமிழ்ப் பாரம்பரியத்துடனான குடில் மற்றும் சிங்கள பாரம்பரிய குடில்கள் என்பன மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றையும் ஆளுநர் பார்வையிட்டார்.




அவற்றைத் தொடர்ந்து மைதானத்தில் தமிழ் மற்றும் சிங்கள பாரம்பரிய கலாசார நடன நிகழ்வுகள் நடைபெற்றன. அவற்றை ஆளுநர் உள்ளிட்ட விருந்தினர்கள் தமிழ்ப் பாரம்பரிய குடிலின் முன்பாக அமைக்கப்பட்டிருந்த 'குந்தில்' இருந்து பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து வேடப்போட்டியையும் பார்வையிட்டு பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளையும் ஆளுநர் ஆரம்பித்து வைத்தார்.





# நிந்தவூரில் தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வு நடைபவனி!

(நூருல் ஹுதா உமர்)

இன்றைய காலகட்டத்தில் தொற்று நோய் மூலம் நிகழும் மரணங்களை விட தொற்றா நோய்கள் மூலம் நிகழும் இழப்புக்களும் மரணங்களும் அதிகரித்து வருகின்றன. தொற்றா நோய்கள் மூலம் நிகழும் இழப்புகளும் பொருளாதார இழப்புகளில் இருந்தும் மீள முடியாமல் பல குடும்பங்கள் தவிக்கின்றன.

மக்களிடையே தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வும் மிக குறைவாகவே காணப்படுகிறது. தொற்றா நோய்களிலிருந்து மக்களை விழிப்புணர்வு ஊட்டும் முகமாக நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. சிவசுப்பிரமணியம் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் ஏற்பாட்டில் நிந்தவூர் 11 ஆம் பிரிவு மக்களுக்கு தொற்றா நோய் சம்பந்தப்பட்ட மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வு



நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக இடம்பெற்றது.

இதன் போது 'ஆரோக்கியமான உணவு ,ஆரோக்கியமான வாழ்க்கை' எனும் தொனிப்பொருளில் தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் நிந்தவூர் 11 ஆம் பிரிவு சேர்ந்த மகளிர் சங்க உறுப்பினர்கள் இந்த நடைபவனியை ஜின்னா பள்ளிவாசல் வீதியில் ஆரம்பித்து நிந்தவூர் பிரதேச செயலகம் வரை சென்று பிரதேச செயலக ஊழியர்களும் இணைந்து இந்நிகழ்வை சிறப்பாக நடத்தி முடித்தனர்.



## ஈஸ்டர் தாக்குதல் குறித்த உண்மைகளை ஆளும்தரப்பு வெளிப்படுத்தவேண்டும்

### ரிசாத் எம்.பி. வலியுறுத்து

(ஹஸ்பர் ஏ.எச்)

மக்களின் எதிர்பார்ப்பான ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான உண்மைகளை ஓரிரு தினங்களுக்குள் வெளிப்படுத்த வேண்டும் என மக்களின் எதிர்பார்ப்பாக காணப்படுகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

திருகோணமலை நிலாவெளி பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) மாலை இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

தேர்தல் காலத்தில் அரசாங்கம் சொன்னதை போன்று செயற்பட வேண்டும். அநியாயமாககைதான வர்களைவிடுவிக்கப்பட்டுசரியானவிமோசனம்கிடைக்க



வேண்டும் என நாங்கள் நம்புகின்றோம். குச்சவெளி பிரதேசத்தில் ஒன்று பட்டு ஒற்றுமையாக வாக்களித்தால் மக்கள் காங்கிரஸின் ஊடாக அதிகளவான ஆதரவை பெற்றுக் கொள்ளும் என நம்புகிறோம். தமிழ் முஸ்லீம் மக்களின் ஒற்றுமை ஊடாக பிரதேச சபை ஆட்சியை அமைக்கலாம். – என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.04.2025இல் வெளியிடப்பெற்றது